திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

ஆண்டு : 8 18-2-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 28

மணமகள் தேவை

●

நற்குடும்பத்தில் பிறந்த நல்ல அலுவலில் உள்ள 33 வயது வாலிபருக்கு படித்த மணமகள் தேவை. ஜாதி மத பேதங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

விவரத்திற்கு கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுக.

செ, த.
c/o என். எம்.
தபால் பெட்டி 2, ஈரோடு

ஏக இந்தியா என்ற வாதம்

காலத்தையும் கருத்தையும் பாழாக்கும் வரட்டு வேதாந்தமாகும்!

நாட்டுப் பிரிவினையைப் பெறுவோம் - நல்லதோர் ஆட்சியினை நிறுவுவோம்!

கர்னாடக திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில்

அறிஞர் அண்ணாவின் விளக்கம்

அன்புள்ள தலைவரவர்களே — தோழர்களே! கர்னாடகப் பகுதியில் தி. மு. கழக மாநாடுகள் இந்த இரு நாட்களாக சிறப்புற நடைபெற்றுள்ளன.

தமிழ் நாட்டில் தி. மு. கழகம் பெற்றுள்ள அளவு வளர்ச்சியை இந்தப் பகுதியில் பெற்றிருக்கவில்லை என்றாலும் இன்று உங்களுடைய பேராதரவால் தி. மு. கழக மாநாடு இத்தனை சீரும் சிறப்புமாக நடைபெற முடிந்துள்ளது.

இந்த மாநாடுகள் நடைபெறுவதற்காக இருமுறை செய்யப்பட்ட முயற்சிகள் தடைப்பட்டன. மைசூர் மாநிலத்தில் ஏற்பட்ட சில தொழில் தகராறுகள், நமது மாநாடுகள் இருமுறை ஒத்திவைக்கப் படுவதற்குக் காரணமாயிருந்தன.

மூன்றாம் முறையாக முயற்சிக்கப்பட்டு இப்போது இம்மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடுகளில் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் இவ்வளவு பெருந் திரளாகக் கூடியிருப்பார்கள் என்று நான் எண்ணவில்லை.

முதன் முதலில் இங்கு மாநாடுகளை நடத்த வேண்டும் என்று என்னிடம் நண்பர்கள் கேட்டபோது, நான் 'இந்தப் பகுதியில் ஏராளமான கிளைக் கழகங்களை நிறுவி, ஆயிரக் கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்த பின்தான் மாநாடு நடத்துவது நல்லது; அப்போதுதான் நல்ல ஆதரவு கிடைக்கும்' என்று கருத்தறிவித்தேன்; ஆனாலும் நண்பர்கள், இப்போதுள்ள கிளைக் கழகங்களின் ஆதரவு கொண்டே இந்த மாநாடுகளை நடத்த வேண்டும் என்றனர்.

இப்போது நீங்கள் இங்கே பல்லாயிரக் கணக்கில் கூடியிருப்பதைப் பார்க்கும்போது, ஏற்கனவே உங்களுக்கு கழகத்தின் கொள்கைகளும் இலட்சியமும் ஓரளவு நன்றாகவே புரிந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த ஊரில் இந்த மாநாடு நடைபெறக் கூடாது என எண்ணிய நல்லவர்களை நாம் மறந்து விடக்கூடாது, அந்த நல்லவர்கள் தி. மு. கழகத்தவர் மாநாடு நடத்துவதற்கு அனுமதி தரக்கூடாது என்று இந்த மாநில முதன் மந்திரி அனுமந்தய்யா அவர்களிடம் மனு சமர்ப்பித்திருக்கிறார்கள் என்ற செய்தியை பார்த்தபின்தான் நான் மாநாட்டில் கலந்து கொள்வதை உறுதி செய்தேன்.

கர்னாடக அரசியல் மாநாட்டு வ. கு. தலைவர் எஸ். ஜெ. உசேன்

தெய்வநெறி ஜனநாயகத்தை ஒழித்துவிட முற்பட்டு அந்த தெய்வநெறிக்காரர்கள் ஜனநாயகத்திற்காகத் தோண்டும் புதைகுழியில், ஜனநாயகத்தை அமிழ்த்துவிட அவர்களை அனுமதிக்க மாட்டோம். நாங்கள் அந்தப் புதைகுழியில் இடம் பெறுவோமே தவிர எங்கள் முயற்சிகளை கைவிடமாட்டோம்; இதனை இந்த மாநாடு நடக்கக் கூடாது என்று தடுத்துவிட நினைத்தவர்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

பொதுவாகவே மைசூர் மாநிலம் சிறந்த முற்போக்கான கருத்துக்களுக்கு இடமளித்து வரும் மாநிலம் எனப் பெயர் பெற்றது என்று கூறுவார்கள்; மைசூர் ஒரு (Modern State) முன் மாதிரியாக விளங்கக்கூடிய மாநிலம் என்பர்; அப்படி உள்ள மாநிலத்தில் விஸ்வேஸ்வரய்யா போன்றவர்களாலும் இன்னபிறராலும் வளர்க்கப்பட்டுள்ள செல்வாக்கெல்லாம் தி. மு. கழகத்தினர் நடத்தும் இரண்டு நாட்கள் மாநாட்டினால் படுசூர்ணமாகிவிடும் என்று யாராவது நினைப்பார்களா!

தெய்வ நெறிக்காரர், 'மாநாடு நடத்த அனுமதி தரக் கூடாதென்று' ஆட்சியாளர்களிடம் முறையிட்டது எதைக் காட்டுகிறது? அவர்களுடைய தெய்வ நெறியிலே அவர்களுக்கே நாணயமான நம்பிக்கை இல்லை என்பதைத்தானே? மலை ஒன்றிருக்கிறது; அதன் மீது யாராவது கல்லெறிந்தால் மலை சுக்கு நூறாகிவிடும் என்று யாரும் பயப்படுவதில்லையே! ஆனால், தெய்வ நெறிக்காரர்களின் நெறி, மலை போன்றிருக்கவில்லை. மலையானால் கல்லெறிவது கண்டு அஞ்சுவானேன்? அவர்களின்நெறி வெறும் காகிதக் கோட்டையாக இருப்பதால்தான் நாம் எடுத்துக் கூறும் கருத்துக்கள் எனும் கற்களால் அந்தக் கோட்டை காற்றிலே பறந்துவிடும் என்று அவர்கள் அச்சம் கொள்கிறார்கள்;

அவர்கள் நாம் ஏதோ கலகம் விளைவிப்போம் என்று கருதினார்கள்போலும் அந்த நல்ல மனிதர்கள் நம்மையும் நன்கு தெரிந்து கொள்ளாதவர்கள் மைசூரின் பண்பினையும் அறிந்துகொள்ளாதவர்கள் என்றே கருதுகிறேன்.

இங்கு நடைபெறும் இந்த மாநாட்டில் 'மக்களைவிட போலீஸ்காரர்களே அதிகமிருந்தனர்' என்று நேற்று ஒரு தின இதழ் எழுதி யிருந்ததாக நண்பர்கள் கூறினர். அப்படியேதான் வைத்துக் கொள்ளுவோமே— போலீஸ்காரர்கள் மட்டுமென்ன அவர்களும் மக்கள்தானே! போலீசார் அதிகமாயிருக்கிறார்கள் என்றால் அந்த நிலையை நான் வரவேற்கிறேன். எங்கள் இலட்சியத்தை போலீசாரும் பட்டாளத்தினரும்தான் கேட்பதற்கு ஒரு சர்க்கார் அனுமதிக்காது. அதனால் போலீஸ்காரர்கள்இங்கு அதிகமாக கூடியிருந்தார்கள் என்றால் எங்களுக்கு இலாபம்தானே!

இங்கே ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிற நீங்களெல்லோரும் ஒன்று போலீஸ் உடையைக் கழற்றிவிட்ட போலீஸ்காரர்களாயிருக்க வேண்டும்—அந்த பத்திரிகையின் கூற்றுப்படி; அல்லது 'காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக'த் தோன்றுவது போல சென்ற ஒரு மாதமாக பெங்களூரில்அதிகமாயிருந்த போலீசாரின் நடமாட்டத்தைப் பார்த்த அந்தப் பத்திரிகையின் கண்களுக்கு உங்களை எல்லாம் போலீஸ்காரர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது போலும்!

இன்று தமிழ் நாட்டில் தி.மு. கழகம் 1000 கிளைகளையும் ஒரு லட்சம் உறுப்பினர்களையும்கொண்டிருக்கிறது. இந்த உண்மையை சென்னை மாநில சர்க்காரும் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாகவோ, மலர் பறிப்பது போன்று பெற்றுவிட்டோம்! இல்லையே! மலர் பறிக்கும் போதுகூட முள் குத்துகிறதே!

11-ம் பக்கம்

கர்னாடக சமூக சீர்திருத்த மாநாட்டு வரவேற்புத் தலைவர் எஸ். வி. பதி

கர்நாடக தி. மு. க. மாநாட்டு நிகழ்ச்சிகள்

சமூக சீர்திருத்த மாநாடு

கர்நாடக தி. மு. கழக முதல் சமூக சீர்திருத்த மாநாடு 12–2–55 சனியன்று பெங்களூர் பினாக்பள்ளிதிடலில் அமைத்துள்ள மஜீக் பந்தலில் கைலாயம் அரங்கில் காலை 10மணிக்கு துவங்கப்பெற்றது.

மாநாட்டுத் துவக்கத்தில் தோழர் ஓ. பி. சிற்றரசு மாநாடுகள் எத்தனை இடுக்கண்களுக்கிடையில் நடைபெறுகிறது என்பதை விளக்கிக் கூறினர்.

அடுத்து தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், வரவேற்புக் குழுவினரின் வேண்டுகோளின்படி, மாநாட்டினைத் துவக்கி வைத்து சொற்பொழிவாற்றினர்.

பின்னர் சமூக சீர்திருத்த மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசி தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் அ. பொன்னம்பலனர், என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் தோழர் கல்யாணசுந்தரம் அவர்களின் 25 ஆண்டு கால பொதுப்பணி குறித்தும், அவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவது கர்நாடகப் பகுதிக்கு சிறப்பு மிகுந்ததாகும் என்றும் எடுத்துக் கூறினர்.

பின் மாநாட்டுத் தலைவர் தோழர் காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் சமூக சீர்திருத்த மாநாட்டின் நோக்கம் குறித்தும் தி. மு. கழகம் சமுதாயத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கள் குறித்தும் விளக்கி மாநாட்டுத் தலைமையுரையினை ஆற்றினர்.

அத்துடன் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மாலை நிகழ்ச்சிகள்

மாலை நிகழ்ச்சிகள் இடைவேளைக்குப் பிறகு 3–30 மணிக்குத் துவங்கின.

தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன் போராட்டம் எனும் தலைப்பிலும் அ. பொன்னம்பலனர் அவர்கள் 'பேய், பூதம், பிசாசு' எனும் தலைப்பிலும் பேசினர்.

தமிழாசிரியர் வெங்கடாசலனர் பேசிய பின் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர் அடுத்து பேராசிரியர் அன்பழகன் அவர்கள் 'கலையும் வாழ்வும்' என்பது குறித்து விரிவுரையாற்றினர்.

இறுதியாக இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்.

அத்துடன் சமூக சீர்திருத்த மாநாடு இரவு 8–45 மணிக்கு முடிவுற்றது.

அரசியல் மாநாடு

13–2–55 அன்று காலை 10–மணிக்கு அரசியல் மாநாடு துவங்கப் பெற்றது.

தோழர் ஓ. பி. சிற்றரசு அவர்கள் மாநாட்டினைத் துவக்கி வைத்து வீர உரை நிகழ்த்தினர்.

அடுத்து, மாநாட்டுத் தலைவர் என். வி. நடராசன் அவர்கள், இதர கழக முன்னணி வீரர்கள் சுற்றிலுமிருக்க, தொண்டர்கள் அணிவகுப்பு வணக்கம் செலுத்த, கழகத்தின் இருவண்ணக் கொடியினை ஆரவாரப் பேரொலிக்கிடையேயும், 'வாழ்க வாழ்கவே—வளமார் எமது திராவிடம்' என்ற பண் இசைக்கிடையேயும் மாநாட்டு முகப்பிலிருந்த மணிக்கம்பத்தில் ஏற்றி வைத்தார்.

பின்னர் வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். ஜே. உசேன் அனைவரையும் வரவேற்று, தோழர் என். வி. நடராசன் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு முன்மொழிந்து பேசினர்.

தலைவரை வழிமொழிந்து தோழர்கள் கே. ஏ. மதியழகன், க. அன்பழகன் அ. பொன்னம்பலனர் ஆகியோர் பேசினர்கள்.

தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை ஏற்று, தி. மு. கழகத்தின் இலட்சியத்தைத் திறம்பட விளக்கி சொற்பெருக்காற்றினர்.

அத்துடன் மாநாட்டின் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

அடுத்து ஆவடி காங்கிரசில் நிறைவேற்றப்பட்டுள்ள 'சோஷலிசம் போன்ற சமூக அமைப்பு' என்ற தீர்மானத்தின் ஏமாற்றுத் தனத்தை குறித்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் விளக்கம் தந்து சொற்பெருக்காற்றினர். அதனை வழிமொழிந்து தோழர் க. அன்பழகன் பேசினர்.

அடுத்து 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சியத்திற்கு கன்னட மக்களின் ஆதரவு கோரும் தீர்மானத்தை முன்மொழிந்து தோழர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதும் அதனை வழிமொழிந்து கன்னடத்தில் தோழர் மு. க. வேந்தன் பேசினர்.

பின்னர் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பேரால் டெல்லி ஏகாதிபத்யம் வடநாட்டில் தொழில் துறைகளிலே ஆவன செய்தும், அதே சமயம் தென்னாட்டினைத் தேய வைக்கும் சூழ்ச்சியினையும் கண்டிக்கும் தீர்மானத்தை தோழர் கே. ஏ. மதியழகன் முன்மொழிந்து விரிவுரையாற்றினர். இதனை கரஞ்சி பெருமாள் வழிமொழிந்தார்.

அடுத்து, மைசூர் ராஜ்யத்தில் கைத்தறி துணிக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தைத் தோழர் அ. பொன்னம்பலனர் முன்மொழிந்து நெசவுத் தொழில், நெசவாளர் நிலை ஆகியவைகளை விளக்கிப் பேசினர். இதனை சென்னை வி. ராமசாமி வழிமொழிந்தார்.

மாலை நிகழ்ச்சிகள்

மீண்டும் மாலை நிகழ்ச்சிகள் 3–30 மணிக்குத் துவங்கின.

துவக்கத்தில் காஞ்சி தோழர் கா. வே. முருகேசன் கழகப் பண்கள் பல இசைத்தார்.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தி. மு. கழக இலட்சியம் குறித்துப் பேசினர்.

அடுத்த, தோழர் குப்பன்—தோழியர் ருக்மணி திருமணம் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்களால் மாநாட்டு மேடையிலேயே நடத்தி வைக்கப்பட்டது.

செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் மாநாட்டின் வெற்றிக்காக ஒத்துழைத்த அனைவருக்கும் மாநாட்டில் கலந்துகொண்ட பொதுச்செயலாளர் அண்ணா உள்பட மற்ற எல்லோருக்கும் நன்றி கூறினர்.

இறுதியாக பலத்த மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே, பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் சிறப்புரை ஆற்றினர்கள்.

●

எட்டாத பழத்துக்கு கொட்டாவி விட்ட கோமாளிகள்!

இந்திய அரசியலிலே-பரந்த கண்ணேட்டக்காரர்களின் புத்தியும் போக்குமே அலாதித் தன்மை வாய்ந்தது!

ஒரு பிரச்னையில், தங்களுக்கென்றால் ஒரு நியாயம் பேசுவர். ஆனால் மற்றவர்களைப்பற்றி குறிப்பிடும்போது அதே பிரச்னையில் வேறு வியாக்கியானங்கள் செய்வர்! இந்த விசித்திரப் பிறவிகளின் 'அரசியல் ஸ்டண்டுகள்,' இன்று ஆட்டங் கொடுத்துங்கூட ஆசை வெட்கமறியாது என்பார்களே அதற்கேற்ப மேலும் மேலும் தங்களின் செப்படி வித்தையைக் காட்ட முனைகின்றனர்!

வடநாட்டு ஆதிக்கத்தின் பொம்மலாட்டத்திற்கேற்றவாறு உருமாறும் திரு-கொச்சி மந்திரி சபையைப்பற்றி நாம் விளக்கத் தேவையில்லை யென்று கருதுகிறோம். பட்டம் சர்க்கார் அரசியல் வானிலே கிளம்பிய விதமும், அது இன்று அறுந்து கீழே வீழ்ந்திருப்பதைப் பற்றியும் பொதுமக்கள் அறிவர்.

அந்தப் பட்டம் சர்க்காருக்கும், திரு-கொச்சி தேசியத் திருமேனிகளுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணமாக, பட்டம் சர்க்காரின் அணைப்பிலிருந்து விடுபட்டு விட்டார்களல்லவா காங்கிரசார்!

அந்த சமயத்திலே பட்டம் சர்க்காரே பயப்படாதீர்! இதோ நாங்கள் இருக்கிறோம், எங்களின் எண்ணத்தை பூர்த்தி செய்வதானால், நாங்கள் தோள் கொடுத்து தூக்கத் தயாரா யிருக்கிறோம் என்று பேரம் பேசினர் திரு-கொச்சி கம்யூனிஸ்டுகள்! அதுவரை கொடுங்கோல் ஆட்சி நடத்தும் பொல்லாதவராக இருந்த பட்டம், பரம யோக்கியராக பரந்த கண்ணேட்டக்காரர்களின் பார்வைக்குப் புலப்பட்டுவிட்டதாம்! எனவே பாதந்தாங்கிகளாக யிருக்க இதோ நாங்கள் தயார் என ஓடோடி வந்தனர்—கம்யூனிஸ்டுகள்!

இந்தத் திடீர் கூட்டுபேரத்தை அறிந்த காங்கிரஸ் தலைமையோ திரு-தமிழர் காங்கிரஸ் தலைவர்களைச் சரிப்படுத்திக் கொண்டு பட்டம் சர்க்காரை வீழ்த்தினர். மீண்டும் பதவியில் அமர்ந்தனர்! காங்கிரஸ் தலைமைப்பீடம்தான் அரசியல் நாணயத்தையும் நேர்மையையும் விட்டொழித்து ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டதே! எனவே அதைப்பற்றியும் விவரிக்க விரும்பவில்லை.

ஆனால் பட்டம் தாணு சர்க்காருடன் பேரம் பேசி பதவியில் அமருவதற்கு துடிதுடித்து இறுதியில் ஏமாற்றமடைந்த, கம்யூனிஸ்டுகள் இன்று கூறும் வியாக்கியானத்தைக் கண்டுதான் நமக்குச் சிரிப்பாய் வருகிறது.

திரு-கொச்சி காங்கிரசார் இன்று பதவியில் அமர்ந்திருப்பது ஜனநாயகத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாம்! இந்த சர்க்கார் நிரந்தரமாக நீடித்து வாழமுடியாதாம்! திரு-கொச்சியின் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையின் மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தினாலல்லாது நிரந்தர சர்க்காரை யாருமே அமைக்க முடியாதாம்! எனவே பொதுத் தேர்தலை உடனே நடத்துக—என்று கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை விடுத்திருக்கிறது! அதுமட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியினர் மீண்டும் சர்க்கார் நிறுவியது குறித்து அதே நாளில் கம்யூனிஸ்டுகள் கண்டனக் கணைகளை வீசியெறிந்துள்ளனர்!

பட்டம் சர்க்காருடன் பேரம் நடத்திய சமயம் பொதுத்தேர்தல் நடத்த வேண்டுவது எவ்வளவு நியாயம் என்பது கம்யூனிஸ்டுகளின் பரந்த கண்ணேட்டத்திற்கு புலப்படவில்லை! தங்களின் பேரம் முறிந்து விடவே, காங்கிரஸ் ஆட்சிபீடமேறியுள்ள இன்றுதான் பரந்த கண்ணேட்டக்காரர்களுக்கு பொதுத் தேர்தலின் அவசியமும், ஜனநாயகத்தின் புனிதத் தன்மையும் பளிச்செனத் தெரிகிறது! முதல் கட்டத்தில் பரந்த கண்ணேட்டத்தின் பார்வை மங்கிவிட்டது போலும்!

திரு-கொச்சி அரசியலிலே பட்டம் சர்க்கார், தங்கள் ஆட்சியின் திருவிளையாடலுக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டதோடு அரசியல் உலகிலே "எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடும்" கோமாளிகளாகக் காட்சி யளிக்கும் கம்யூனிஸ்டுகளின் முகமூடியையும் கிழித்தெறிந் திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்!—பாபம் பரந்த கண்ணேட்டக்காரர்கள்!!

—நக்கீரன்

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன-தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினல் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40–நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னுருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை சாப்பிடக்கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்

டப்பி 1-க்கு விலை ரூ.	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

கர்நாடக தி. மு. க. சமூக சீர்திருத்த மாநாடு : வரவேற்புத் தலைவர் பதி சொற்பொழிவு

12-12-55 *சனிக் கிழமை பெங்களூர் பிளாக்பள்ளி உயர்நிலை பள்ளித் திடலில் நடந்த கர்நாடக தி. மு. கழக முதல் சீர் திருத்த மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர். எஸ். வி. பதி அவர்கள் ஆற்றிய வரவேற்புரை.*

அறிஞர் அண்ணு அவர்களே! அருமைப் பெரியோர்களே! அன்புள்ள தோழர்களே மதிப்புக்குரிய தாய்மார்களே! உங்கள் அனைவரையும் வரவேற்புக் குழுவின் சார்பாக வணக்கம் செலுத்தி, வருக வருக, என வரவேற்கிறேன்.

சென்னையை மையமாக வைத்து சுமார் 25 ஆண்டுகட்கு முன் தொடங்கிய நமது சீர் திருத்தக் கருத்துக்கள் மறுமலர்ச்சி இயக்கத்தின் பேரால், சட்டரீதியாக ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டிருக்கும் நமது திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டை வாயலிலிருந்து முரசொலி கொட்ட முழுங்கிப் புறப்படுவதைக் காண மகிழ்ச்சியடைகிறோம்

உலக வரலாறெனும் மாலையில் முத்தும் பவழமும் போல் தோன்றிய பல சீர் திருத்த வாதிகள் பலநாட்களாக வருந்தி உழைத்துத் தந்த நற் கருத்துக்களை சில நயவஞ்சகர்கள் தங்கள் சுயநல எண்ணத்தால் அவைகளை மக்கள் மன்றத்திலே உலவவிடாமல் செய்திருக்கின்றார்கள்.

ஆனல் நம் நாட்டில்; அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி என்றால் எத்தகையது, அதன் கொள்கைகளும் கோட்பாடுகளும் எவை என்பவைகளைக் கேட்க ஆயிரமாயிரம் தோழர்கள் மலர்ந்த முகத்தோடு குழுமியிருப்பதைக் காண உள்ளபடியே நெஞ்சம் நெகிழ்ந்து உள்ளம் பூரித்து இருதோளும் இமயம்போல் விந்தியம் போல் உயருகிறது.

நாம் ஏன் சமுதாயத்தை சீர் திருத்த முனைகிறோம் என்ற கேள்விக் குறியின் பக்கத்திலே நின்றுக் கொண்டு ஆராய்ச்சி செய்தால் உலகம் நமக்களித்துள்ள பதில், சமுதாய விடுதலை இல்லையானல் அரசியல் விடுதலை யடைந்தும் பயனில்லை என்பதுதான்,

பிறக்கும்போது சுதந்திரமாக பிறந்த மனிதன், பின் ஏன் அடிமையானன் என்று பார்ப்போமானல், மக்கள் வாயில்லாப் பூச்சிகள் போல் வாழ்ந்த நேரம், வலியோன் ஒருவன் தன்னைத் தலைவன் என்றும், மன்னன் என்றும் சொல்லிக் கொண்டு, அந்த மன்னன் சொல்வதை மக்கள் கண்களைமூடிக் கொண்டு அடிமைப்படச் செய்ய ஒருவம்பனை துணைக்கழைத்துக் கொண்டு இருவருமாகச் சேர்ந்து சதி செய்துவிட்டார்கள் நானே இதைச் சொல்லுகிறேன் என்றால் மக்கள் நம்புவார்களோ நம்பமாட்டார்களோ என்ற சந்தேகத்தால் ஆண்டவனே உங்களை இப்படி ஆக்கி வைத்திருக்கின்றான் என்ற மடமையை மக்கள் மனதிலே ஏற்றிவிட்டார்கள்.

இங்கேதான். தூய்மையான குணம் படைத்தவர், விருப்பு வெறுப்பற்றவர், மனிதன் சிந்தனைக்கு அடபாற்பட்டவர் ஏற்றத்தாழ்வற்றவர். எல்லாமறிந்தவர், இவ்வையசத்தைப் படைத்தவர், எல்லாரையும் இடநிற இன பேதமில்லாமல் தன் மக்களென கொண்டாடுபவர் என்றெல்லாம் சொல்லிப் போற்றப்படுகிற கடவுளுக்கு அல்லது கடவுள் தன்மைக்கு களங்கத்தை உண்டாக்கும் கண்யமற்றவர்கள் மதவாதிகளா நாமா என்ற போராட்டம் தொடங்குகிறது.

ஒன்று, கடவுள் இப்படி எல்லாம் ஏற்றத் தாழ்வுகளை செய்யாதவராயிருக்க வேண்டும், அலல்து அவர் தான் இப்படி ஒருவனைப் பஞ்சமனகவும். மற்றொருவனை பார்ப்பனனகவும் படைத்திருக்கின்றார் என்று சொல்வது மத வாதிகளின் பச்சைப்பொய்யாக இருக்க வேண்டும் இந்த இரண்டில் எது உண்மை என்று கண்டு பிடித்து மக்களுக்குச் சொல்ல வேண்டிய மகத்தான பணியின் அரங்கமாகத்தான் இன்றைய சீர்த்திருத்த மாநாடு, தொடங்க இருக்கின்றது.

சமூகம், மானுபிமானம் இழந்து பழமையெனும் உளைச்சேற்றில் தள்ளப்பட்டபோது, பகுத்தறிவெனும் கரையேற மார்க்கம் அறியாமல் தன் துக்கக் கரங்களை நீட்டி கண்ணீர் திவிலைகளைச் சிந்திக்கொண்டிருந்த போது, அதைக் காப்பாற்றி கரைசேர்க்க முன்வந்த அறிஞர்களில் சிலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், சிலர் தீயில் தள்ளப்பட்டிருக்கிறார்கள், சிலர் தூக்கிலேற்றப்பட்டிருக்கிறார்கள், சிலர் கல்லாலடிக்கப்பட்டிருக்கிறார்கள், சிலர் கடுஞ்சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள், சிலர் கைகளில் விலங்கிடப்பட்டு கண்கள் கட்டப்பட்டு கானகத்தில் விடப்பட்டிருக்கிறார்கள். இந்த கோர நிகழ்ச்சிகளைத்தான் ரத்த எழுத்துக்களால் காட்டிக்கொண்டே இருக்கிறது. கடந்த கால உலக வரலாறு. எனினும் அதையே செய்ய நாம் துணிந்து முன்வந்திருக்கிறோம். ஏன்! அவர்கள் விட்டுச்சென்ற கொள்கைகள் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. நரம் சாக நேரலாம், எனினும் நாம் அந்த பணியை விட்டோமில்லை.

அன்று அயோத்தியில் ஒரு தமிழன் யாகம் செய்தான் என்ற காரணத்துக்காக இராமனல் கொல்லப்பட்டான். எனினும் அந்த ஈரமில்லா நெஞ்சத்தானை இராமன் அன்று முதல் இன்று வரை தெய்வமாகவே கொண்டாடப்படுகிறன் என்றாலும் அவனைத்தான் நாம் இன்று மனிதப் பண்பறியாத ஜனநாயக முறை தெரியாத காட்டு ராஜா என்று பல கோணங்களிலிருந்து சுட்டிக் காட்டுகிறோம். ஆனல் இன்று எங்கோ தூரத்தில் நின்றுகொண்டு சில எடுபிடிகளை நம்மீது ஏவிப்பார்ப்பது தவிர நம்மைத் தீரமாக அணுகுவாரில்லை. இதை நாம் இன்று பெற்றிருக்கிற வெற்றி என்பதைக் காட்டிலும் நம்நாடு அறிவெனும் களங்கரை விளக்கத்தை நோக்கி வெகுவேகமாக வந்துக் கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை,

உதாரணம் சொல்ல வேண்டுமானல் நம்முடைய முன்னணி வீரர்களால் எழுதப்பட்ட நாடகங்களையும், திரைக் கதைகளையும் பார்க்க மச்கள் ஆர்வத்தோடு கூடுகிற அளவுக்கு அசல் ராமாயணத்தையும், அல்லி அர்ஜுனவை வள்ளித் திருமணத்தையும், பவழக் கொடியைம், பாஞ்சாலி சபதத்தையும் கிருஷ்ணலீலாவையும் கிசகவதத்தையும் பார்க்கக் கூடுவதில்லை.

அறிவுக் கோட்டையின் கதவுகள் மெல்ல மெல்ல திறக்கப்படுகிறது. அந்த அளவுக்கு இடிந்துக் கொண்டிருக்கும் பழமையின் கோட்டைக் கதவுகள் மூடப்படுகின்றன. நம் நாடு சமுதாயத் துறையில் விடுபடுமானல் அந்த பெருமை உள்ளபடியே மறுமலர்ச்சி இயக்கத்தாராகிய நம்மைத்தான்சாரும். அதை நாம் விரும்பி ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் வருங்கால் உலகம் அதை நம் இயக்கத்திற்கு என்றுமழியாத சாதனமாக்கிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பதை எண்ணுமல் எப்படி வாழவேண்டும் என்பதை முடிவு கட்ட முடியாது. நடந்ததை மறப்போம் என்ற கொள்கை ஒரு சிலவற்றிற்கு உகந்ததுதான். ஆனல் இதுகாறும் சமூகத்தின் பேரால் மதத்தின்பேரால், ஆண்டவன் பேரால், மக்கள் தலைமேல் ஏற்ற வைக்கப்படிருக்கும் பழிச் சுமையை இறக்க வேண்டுமானல், இறந்தகால எண்ணங்களை நடவடிக்கைகளை எண்ணிப் பார்க்காமல் எதிர்காலத்திற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடுவதென்பது இயலாத காரியம். ஆகவேதான் நாம் கடந்துவந்திருக்கிற பயங்கரமான பாதைகளை எண்ணி செம்மையானதோர் சீர்திருத்தப் பாதையை வகுக்க வேண்டியவர்களாகிறோம்,

நிலப் பிரச்னையையும் பணப் பிரச்னையையும் ஆளும் பிரச்னையையும் அலசிப் பர்ர்க்கும் பல கட்சிகளும் கழகங்களும் நம் நாட்டில் இயங்கிக் கொண்டுதானிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் மேலாக நாம் ஒவ்வொருவருடைய மனப் பிரச்னையை அலசிப் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றோம். ஏனெனில் நிலப் பிரச்னையைவிட பணப்பிரச்னையை விட ஆளும் பிரச்னையைவிட மனப் பிரச்னை மகாக்கடினமானது. மேற்சொன்ன மூன்றுவித விடுதலையையும் நாம் எளிதில் அடைந்துவிடலாம். ஆனல் நம்நாட்டின் மதக் கோட்பாட்டின்படி ஒருவன் மனவிடுதலை அடைவதென்பது அவ்வளவு எளிதானதல்ல.

அழுக்கையெல்லாம் தான்இழுத்துக் கொண்டுதண்ணீரை தூய்மைப்படுத்தும் பாசிபோல் எதிரிகளால், சர்க்காரால், மதவாதிகளால் ஏற்படுகிற எல்லாவித துன்பங்களையும் நாம் ஏற்றுக்கொண்டு சமுதாயத்தைத் தூய்மையாக்குகிறோம். இதில் கேளிக்கோ கிண்டலுக்கோ இடமில்லை.

எதைச் சொன்னல் மக்கள் வெறுப்படைந்து நம்கட்சியில் சேராமல் போய்விடுகிறார்களோ என்று பயந்து பல கட்சிகள் தொட பயப்பட்ட கருத்துக்களையே நாம்தொட்டு மக்களுக்கு காட்டியிருக்கிறோம். அதனல் நம் கழகம் அழிந்துவிடவுமில்லை, அருகிவிடவுமில்லை. மாருக மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. இதிலிருந்தாவது மற்றக் கட்சிக்காரர், சீர் திருத்த நோக்கங் கொண்டு நல்லதோர் படிப்பினையை பெற்று நம்மோடு தோள்தொட நின்று பணியாற்ற முன்வருவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

காலுக்கும் கைக்கும் செவிக்கும் வாய்க்கும் விடுதலை கிடைத்துப் பயனில்லை. எண்ணத்திற்கு விடுதலை கிடைக்க வேண்டும். இதையே அண்ட முகட்டிலிருந்து ஆவேசமான குரல் எழுப்பினர்கள் பல அறிஞர்கள்.

இருட் சிறையா! இதோ செல்லுகிறேன் ஆனல் என்றாவது ஓர் நாள் இவ்வுலகம் உருண்டை என்ற என்கருத்தை உண்மையென ஒப்புக்கொள்ளும் என்று சிறைக்குள்ளே சென்றான் இத்தாலி அறிஞன் கலிலியோ. உலகம் தட்டை என்று சாதித்துவந்த பைபிளின்பழைய ஏற்பாடுகளும் புதிய ஏற்பாடுகளும் இன்றுவெட்கித் தலைகுனிந்து மௌனம் சாதிக்கின்றன.

'மாளாத கொள்கைக்காக மாள்கிறேன்' என்றான் கிரேக்க ஞானி சாக்ரடீஸ். மாண்டது அங்கே மதம்.

'என் பேனு எரியீட்டி' என்றான் வால்டேர். எரிந்தது மன்னன் உடல் மணிமுடி மணியாடம் செங்கோல் எல்லாம்.

'என் கருத்துக்கள் எரிமலை' என்றான் ரூசோ அந்த எரித்தீயில் உருகிஓடியது பாஸ்டில் எனும் பயங்கரச் சிறையின் இரும்புக் கதவுகள்.

'நான் நாத்தீகன்' என்றான் பகிரங்க மேடையிலே இங்கர்சால். ஆத்திகர்கள் கூடி ஆயிரமாயிரம் பொற்காசுகளை அவன் காலடியிலே குவித்தார்கள்.

கருஞ்சட்டைப் படையால் கலக்குவேன் என்றான் மாஜினி. கலங்கியது ரோம் சாம்ராஜயம்.

'வெள்ளை மாளிகைக்குள்ளே நான் போக நேர்ந்தால் என்று தன் இள்மையிலே மனதுக்குள் சொல்லிக் கொண்டான். அந்த வாய்ப்பு அவனுக்கு கிடைத்தபோது தன் வெள்ள உள்ளத்தைத் திறந்து அடிமைகளின் விலங்குகளை உடைத்தெறிந்தான் ஆப்ரகாம். இவர்களைப்போலவே புருனே, ஜாவில்லிம், ஜான்பாட்லி, அடாடர் முஸ்தாபா கெமல்பாஷா போன்ற சீர் திருத்த வாதிகள் நம் வணக்கத்துக்குரியவர் என்று சொல்லிக்கொண்டு அத்தகு மேதைகளின் வரலாறுகளை நீங்கள் கேட்பதற்காகவே இந்த சீர் திருத்த மாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. இம்மாநாட்டிற்குபழைய சீர் திருத்தத் தோழரும் காஞ்சிதந்த செல்வமுமான அருமை நண்பர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களை தலைமை வகிக்கும் படிகேட்டுக் கொள்கிறேன்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோர்யம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92. தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

அடுத்த வாரம்

●

பெங்களூர் மாநாட்டின்-பிறவிவரங்களும் சொற்பொழிவுகளும், கூத்தரசன் மடல், கேள்வி—பதில், பூங்கொத்துகள் முதலியன வெளிவரும். —ஆ-ர்.

திராவிடன்

சென்னை : 18—2—55 : வெள்ளி

பணி புரிந்தோம் பாதை அமைத்தோம்.

●

இத்திங்கள் 12—13-ம் நாட்களில், கர்னாடகத்தில் தி. மு. கழக முதல் சமூக சீர்திருத்த—அரசியல் மாநாடுகள் இனிது நடைபெற்றுள்ளது. இம் மாநாட்டினை நடத்த கழகத் தோழர்கள்—வரவேற்புக் குழுவினர் முயற்சி எடுத்துக் கொண்டதிலிருந்து ஏற்பட்ட சில தொல்லைகளை நண்பர்கள் அறிந்ததேயாகும்.

பெங்களூரில் ஏற்பட்ட தொழில் தகராறின் காரணமாக இருமுறை—அதுவும் கடைசி நேரத்தில் மாநாடுகள் ஒத்திவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வரவேற்புக் குழுவினர் பெரும் நட்டமடைய நேரிட்டது. ஏனினும் எதையுந் தாங்கும் இதயம் உண்டு என்பதற்கேற்ப வரவேற்புக் குழுவினர் தங்களின் கடமையை அதிலும் வெற்றிகரமாக நிறைவேற்றி யுள்ளனர். இத்தகு பணியில் தீவிரமாகக் கலந்து கொண்ட கர்னாடகத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகளுக்கும் பொதுவாக வரவேற்புக்குழுவினருக்கும் நமது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெங்களூர் மாநாட்டின் வெற்றிக்கு மற்றொரு முக்கிய காரணம், மாநாடு நடைபெற்றால் கர்னாடகமே தலைகீழாய்விடும் என்று ஆவேசக் குரலெழுப்பி—முதலமைச்சர் அனுமந்தய்யா அவர்களிடம் தூது சென்று மாநாட்டை எவ்வகையிலாவது தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று தவமிருந்த தெய்வநெறிக் கூட்டத்தினர் என்று சொல்லிக் கொள்ளும் தோழர்களின் திருத்தொண்டேயாகும்.

மாநாட்டில் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல நமது இயக்கப் பிரச்சாரம்—தமிழகத்தைப் போன்று வலுப்பெற்று நிற்காத கர்னாடகத்தில்-நமது மாநாடுகள் சீரும் சிறப்புடனும் நடைபெற வேண்டும் என்று ஆண்டவனே தமது அடியார்களை இப்படித் தூண்டிவிட்டாரோ அறியோம். எது எவ்வாறாயினும் இம்மாநாட்டிற்கு வந்திருந்த மாற்றுக் கட்சி தோழர்களும் குறிப்பாக வைதீகர்களும் தி.மு. கழகத்தின் கொள்கை கோட்பாடுகளில் தாங்கள் கொண்டிருந்த வீண் சந்தேகங்கள் மனக்குழப்பங்கள் இவைகளிலிருந்து ஓரளவாவது தங்களை விடுவித்துக் கொண்டிருப்பார்களென்று நம்புகிறோம்.

மாநாட்டில் சொற் பொழிவாற்றிய அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற தோழர்களும் அந்த அளவுக்கு கழகக் கொள்கையினை விளக்கியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் இம்மாநாட்டில் மூன்று முக்கிய பிரச்னைகளை வலியுறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சோஷலிஸம் "மாதிரி" ஒரு சமுதாயத்தை நிறுவுவது தான் காங்கிரசின் லட்சியம் என அண்மையில் நடைபெற்ற ஆவடி காங்கிரசின் தீர்மானத்தின் ஏமாற்றுத்தனத்தையும், ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பேரால் வடநாட்டை மேலும் மேலும் வளப்படுத்தியும் தென்னாட்டினைத் தேயவைக்கும் அநீதியையும் இத்தகைய அநீதிகள் அறவே நீங்க வேண்டுமாயின் திராவிட நாட்டுப் பிரிவினையால் தான் முடியுமென்பதை விளக்கிக் காட்டி அத்தகு பணியில் கர்னாடக மக்களும் தங்களின் ஒத்துழைப்பைத்தர வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இப்பிரச்னைகளை மேலும் விவரித்து பிரசாரம் செய்ய வேண்டுவது கர்னாடகப் பகுதியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் முதற்பணியாகும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது கொள்கையைப் பற்றி வீண் ஐயப்பாடு கொள்பவர்களும், திராவிட நாட்டுப் பிரிவினைக்கு கன்னட மக்களின் ஆதரவு இருக்கிறதா என்ற கேள்விகளைக் கேட்டுத் தங்களின் காதுகளை அடைத்துக்கொண்டு பவனிவரும் விசித்திரப் பிறவிகள் திருந்தும் வகையிலும், கர்னாடகப் பகுதியில் நமது தோழர்கள் கழகப் பிரச்சாரத்தைச் செய்ய முற்பட்டால் கன்னட மக்கள் தங்களின் ஒருமித்த ஆதரவைத் தருவார்களென்பதில் ஐயமில்லை.

நிற்க மாநாட்டின் சிறப்புக்கு அரண் அமைத்து நின்ற தொண்டர் படையினரின் கட்டுப்பாட்டினையும் ஆர்வத்தினையும் மனமாரப் பாராட்டுகிறோம். கர்னாடக தி. மு. கழகத் தோழர்கள் இம்மாநாட்டின் மூலம் கர்னாடக மக்கள் காட்டிய பேரார்வத்தை அடிப்படையாக வைத்து நமது கழகக் கொள்கையினை வெற்றி பெறச் செய்யவும் கன்னட மக்களே பெரிதும் பொறுப்பேற்று கழகம் பணியாற்றவுமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுகிறோம்.

தி. மு. கழகப் பொதுக்குழு

20-2-55 ஞாயிறு காலை 10-மணிக்கு
கோவை, பேரூரில் நடைபெறும்.

●

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அரசர் அண்ணாமலையார் நிறுவிய அறிவுச்சோலை—அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இருபத்தைந்தாண்டுகள் பணியாற்றி—வெள்ளி விழாவினைக் கொண்டாடும் வாய்ப்பினைப் பெற்றமை கண்டு மகிழ்ச்சியடைகிறோம், பெருமை கொள்கிறோம்.

செயற்கரிய செய்த செம்மல் செட்டிநாட்டரசர் அண்ணாமலையார் அவர்களுக்கு தமிழகம் செய்த கைமாறுயாது? திருவுருவச்சிலை திறப்பது மட்டும் போதுமா? இது ஓரளவு அப்பெருந்தகையாருக்கு நன்றி காட்டும் தன்மையேயாயினும், அதைவிட சிறந்த கைமாறு—அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பொன்விழா—வைரவிழா, நூற்றாண்டு விழாக்களும் கொண்டாடும் அளவுக்கு அரசர் அண்ணாமலையாரின் பிரதிபிம்பமாய் தலைநிமிர்ந்து தோற்றமளிக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் அதனின் தனிச் சிறப்பும் வளரச் செய்தல் வேண்டும். இதுதான் அரசர் அண்ணாமலையாருக்குத் தமிழகம் செய்யும் கைமாறாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழகத்திற்கு அளித்துள்ள செல்வங்கள் ஏராளம், அக்கலைச் சோலையிலே மலர்ந்த அறிவுக்கதிர்கள் பொதுப்பணியில் வீசிடும் மணம் நாடறிந்ததே யாகும்.

இத்தகைய செல்வங்களை மேலும் மேலும் தமிழகத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தரவேண்டு மென்பதே நமது ஆசையாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—தமிழகத்தின் சிறப்புக்குச் சிறப்பளிப்பதாகும். அதுமட்டுமல்லாமல் தன்மான இயக்கத்தின் உயரிய கொள்கையை அரசர் அண்ணாமலையார் இப்பல்கலைக் கழகம் மூலம் நிலைபெறச் செய்திருக்கிறார் என்றே கூறலாம்.

அரசர் அண்ணாமலையாரின் வழி நின்று இப்பல்கலைக் கழகத்தைப் பேணி வரும் செட்டி நாட்டரசர் சர், எம், ஏ. முத்தையா அவர்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு பெருதவியாய் நின்று பணியாற்றிவரும் அனைவருக்கும் நமது மனமார்ந்த பாராட்டுதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

பொள்ளாச்சி தி. மு. கழகம்

19—2—55 சனி மாலை 7-மணிக்கு மார்க்கெட் ரோடு—திருவள்ளுவர் திடலில் மாபெரும் கூட்டம் நடைபெறும். தோழர் **இரா. நெடுஞ்செழியன்** சொற்பொழிவாற்றுவார்.

திருச்சி சங்கரன் முன்னேற்றத் தனிப்பயிற்சிக் கல்லூரி

20—2—55 ஞாயிறு மாலை 4-மணிக்கு திருச்சி நகர் கருணாநிதி பூங்காவில் புரட்சிக் கவிஞர் **பாரதிதாசன்** அவர்கள் திருக்குறள் பற்றிய விரிவுரை நல்குவார்கள். இரவு 7-மணிக்கு திரு **எம். கே. கோவிந்தராச பாகவதர்** தம் குழுவினருடன் பாரதிதாசன் அவர்களின் பாடல்களைப் பாடுவார்கள். ஒலி பெருக்கி உண்டு.

இரா. சு. தங்கப்பழம்

சுற்றுப்பயணம்

20—2—55 திருப்பூர்
21—2—55 குனியமுத்தூர்
22—2—55 பல்லடம்

●

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

பிப்ரவரி 17. திட்டை (சீர்காழி)
18. வேலநத்தம்
19. சித்தலவாய்
20. கோவை (பொதுக்குழு)
26. கும்மிடிபூண்டி
27. திருப்பத்தூர் (வ. ஆ.)

திருவானந்தம்—சுந்திராம்பாள்

●

நீதிக்கட்சி—தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் இயக்கங்களின் முக்கியஸ்தரும் தமிழ்ச் செல்வருமான தோழர், பாலகுருசிவம் அவர்களின் மகன் திருவானந்தம் அவர்களுக்கும், தோழியர் பா, சுந்திராம்பாளுக்கும் 4-2-55 காலை சென்னை நுங்கம்பாக்கத்தில், தி. மு. கழக செயலாளர் வ. சங்கரநாராயணன் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. மணமக்களைப் பாராட்டித்தோழர்கள் என். வி. நடராசன், ஏ. கே. வில்வம் மற்றும் பலர் பேசினர். ஏராளமான நண்பர்கள் வந்திருந்து வாழ்த்திச் சிறப்பித்தனர்.

நான் கண்ட அண்ணா

டி. வி. நாராயணசாமி

முதலாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம் முடிவடைந்த நேரம். 1939-ம் ஆண்டின் கடைசி நாட்களாக யிருத்தல் வேண்டும். திருச்சியிலே டி. கே. எஸ். சகோதரர்களின் பால சண்முகானந்த சபையார் நாடகங்கள் நடத்தி வந்தனர். அங்கே நானொரு நடிகன். சுயமரியாதைக் கொள்கைகள் எனது உள்ளத்திலே பயிராகிக்

கொண்டிருந்த சமயம். ஓர்நாள் நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. நாடக மேடையிலே முன்புறம் அமைக்கப்பட்டுள்ள தட்டிகளின் வழியாக நானும் என் போன்ற இளைஞர் பலரும் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவரை ஆவலோடு பார்ப்பதற்குத் துடியாய்த் துடித்து நிற்கிறோம். யார் அவர்! ஒரு சினிமா நடிகர் அல்ல, நடிகையுமல்ல. ஆனாலும் அவரைக்காண உள்ளம் துடிக்கிறது. அந்த உள்ளங் கவர்ந்த உத்தமர் வேறு யாருமில்லை. புதுமைத் திராவிடத்தை உலக அரங்கிலே ஆற்றல் நிறைந்த பேரரசாக உருவாக்கிக் காட்டவல்ல **அறிஞர் அண்ணா** தான்.

வருங்காலத் திராவிடத்தை வளமாக்கத் திட்டங்கள் தீட்டித் தரும் சக்தி படைத்தவர் அண்ணா என்பதை அந்த நேரத்தில் தெளிவுள்ளவர்களைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்க முடியாது. 'விடுதலை'ப் பத்திரிகையின் தலையங்கங்களை விரும்பிப் படிக்கும் நிலையும், அதிலே ஒரு புதுமையும், புரட்சி வேகமும், தெளிந்த அரசியல் விவேகமும், கட்சியைக் கட்டிக்காத்து வளர்க்கும் தன்மையும் ஏற்பட்டது. அண்ணா காலத்திலேதான்,

விடுதலை தலையங்கப் பகுதிகளை ஆர்வமுடன் படித்துவந்த என் போன்றோருக்கு அந்த அறிவின் தூதுவரை இமை கொட்டாது காண்பதிலே சொல்ல முடியாத மகிழ்ச்சி. ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டு பார்க்க முந்தினோம். தூரத்திலிருந்து சிறிது பார்க்க முடிந்ததென்றாலும் அருகே நின்று பார்க்க வேண்டும்; அவரோடு கொஞ்சம் பேசவேண்டும் என்ற ஆசை அலைஅலையாக எழுந்தது உள்ளத்திலே. நாடகம் முடிந்து ரயிலுக்குச் செல்ல அண்ணாவும் அவரோடு வந்தவரும் குதிரை வண்டியிலே ஏறி விட்டனர்.

நாடகக் குழுவின் சட்டப்படி சிறுவர்களாய் இருப்பவர்கள் தனித்துச் செல்வதும் தனியாக நண்பர்களிடம் பழகுவதும் அனுமதிக்க முடியாத ஒன்று. நாடகப் பையன்களோடு நான் தங்கியிருக்கும் வீட்டுக்குச் செல்ல வேண்டியவனாகிவிட்ட நிலையில் கொஞ்சம் கட்டுப்பாட்டைமீறி அண்ணாவோடு பேசிவிட எண்ணி வண்டி அருகே செல்ல முயன்றேன், வண்டி ஓட்டும் தோழனுக்குத் தெரியுமா அது! குதிரையை வேகமாகத் தட்டினான். குதிரை பறந்தது. ஒரு வார்த்தையாவது பேசி விடுவோம் என நடிகர் கூட்டத்தை விட்டுத் தனியாக ஓடினேன்-ஓடிக் கொண்டேயிருந்தேன்.

குதிரையோடு போட்டிபோட முடியுமா என்னால். மனோ வேகந்தான் இருந்ததே தவிர ஓட்டத்திலே வேகத்தைக் காட்டமுடியவில்லை. சோர்ந்துவிட்டேன். கூட்டத்தைவிட்டுப் பிரிந்து சென்ற எறும்பு மறுபடியும் எறும்புக் கூட்டத்தோடு வந்து சேர்ந்து கொண்டு ஊர்ந்து செல்வதைப் போல நடிகர் கூட்டத்தோடு வந்து சேர்ந்து கொண்டேன். பல ஊர்களுக்குச் சென்று நாடகங்கள் நடத்திவிட்டு நாடகக் குழு ஈரோடு வந்தது.

பகுத்தறிவுப் பகலவன் பெரியாரும், அறிவுலகஜோதி அண்ணாவும் வசித்து வரும் ஊருக்கு நாம் வந்துள்ளோம் என்பதை எண்ணும்போது எனக்கு ஒவ்வொரு நாளும் தித்திக்கும் திருநாளாகவே காட்சியளித்தது. பெரியாரின் உருவப் படத்தை சட்டையிலே அணிந்து கொண்டு ஓர்நாள் விடுதலை அலுவலகத்திற்குச் சென்றேன். வெண்தாடி வேந்தரின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டேன் — களித்தேன். ஆர்வம் பொங்கப் பொங்க உரையாடினேன். எங்கே அண்ணாவென்று என் கண்கள் தேடின. எங்கே அண்ணாவென்று வாய்திறக்கு முன்னர் இங்கே வாருங்களென்று என்னை நோக்கி அழைப்புக்குரல். ஆம்! அந்த இனிய குரல், அண்ணாவின் குரலேதான்.

நீங்கள்தானா அண்ணாதுரை என்றேன். ஆம் என்றார். ஆகா அந்த பதிலே எவ்வளவு அடக்கம்! உட்காரச் சொன்னார், உட்கார்ந்தேன். கட்சிக் கொள்கைகள், இலட்சியத் தன்மைகள் பற்றி கேள்விகள் பல கேட்டேன். அத்தனைக்கும் மிக மிக எளிதாக அறிவு நுட்பம் நிறைந்த பதில்களைப் பெற்றேன். அவ்வளவுதான், நேரம் போனதே தெரியவில்லை. காண முடியுமா அவரை என்று எண்ணியவன் அன்று கண் குளிரக் கண்டேன். ஒரு வார்த்தை பேச முடியுமா அவருடன், என்றிருந்தவனுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டே இருந்தார். அந்த ஒவ்வொரு நாளும் எனக்குத் தித்திக்கும் திருநாள்! அறிவொளி வீசும் கண்கள் என்னை ஆட்கொண்டன. கனிவு வழியும் அவரது வாய்மொழியும் எனக்கு தெவிட்டாத தெள்ளமுதாக இருந்தது.

கொள்கையின் வேகம் பலமாக வேரூன்றியது. உள்ளத்திலே கலைஉலகிலே மறுமலர்ச்சியைக் காண அண்ணா நாடகங்கள் தீட்டினார். அதிலே நடிக்க அவாக் கொண்டேன். அன்புத் தம்பி யொருவன் நாடக உலகிலிருந்து வருகிறான். அவனை இலட்சியப் பணியில் ஈடுபடச் செய்வோம் என்று தனது நாடகங்களிலே நடிக்கச் செய்தார். அந்த நாளை எண்ணும்போது.........!

எங்கோ போய்க் கொண்டிருந்த கலையுலகம் அண்ணாவின் ஆற்றலால் இலட்சிப் பாதைக்குத் திரும்பியது. இன்று எங்கெங்கு காணினும் நமது கொள்கை முழக்கம். கலையுலகிலே எதிரொலிக்கக் காண்கிறோம். வாழ்வோ, தாழ்வோ அண்டினாலும் அசைக்க முடியாத அளவுக்கு உள்ளத்திலே உரமேறிப்போன தன்மானக் கருத்துக்களுக்காக நாம் வாழ்கிறோம் என்பதை நினைக்க நினைக்க நெஞ்சம் களி கொள்கிறது. நாட்டுப் பணியிலே ஈடுபடும் தகுதியை ஆக்கித்தந்த அண்ணாவின் பாதையிலே வீர நடை போடுவோம். நாடகத் துறையில் ஏற்பட்டுள்ள பழமை வெறியின் எதிர்ப்பைத் தகர்த்தெறியவும் நம்நாட்டின் தன்மானத்தை நிலைபெறச் செய்யவுமான கொள்கைக்கு அயராது பாடுபடுவோம். அப்பண்பினை வளர்த்துக் கொள்ள உறுதிபூணுவோம்.

நடிகமணி, டி. வி. நாராயணசாமி

குயிலே நில்!

சித்தார்த்தன், பி. எ.

சின்னக் குயிலே நில்! நில்!!
சிறகொடிக்க விளைக்கின்றான் வடவன் வில்
புன்னை மரத்திருந்து உன் அன்னை
புலம்பி யழுவதைக் கேள்! கேள்!!

வானில் மிதந்திடும் வடிவழகே கேள்!
வண்ணச் சிறகடித்து வட்டமிட்டுப் பறந்து
தேனில் கலவையிட்ட தென்றமிழ்க் கீதத்தை
திகட்டாது தருகின்ற தெள்ளமுதே நில்!

சமதர்மத் தேனருந்தி சங்கத் தமிழ்ப் பாடி
சரிநிகரே மக்களென் சாற்றிட்ட நாட்டினிலே
நமதருமைப் பூமியிலே நாட்டோரின் மத்தியிலே
நாதக் குரலெழுப்பும் கீதத்தின் வார்ப்படமே!

மதமென்னும் கண்ணியிலே மாட்ட வொரு
மறமறியா வடவரங்கே வளைப்பா ருன்னை
இதமான சாத்திரங்கள் இரும்புக் கூண்டு
இருட்டறையில் பூட்டிடுவார் சொன்னே னின்று!

அடவிக் குயிலே! அருந்தமிழ் யாழே!
அன்னைத் திராவிட முன்னை யிழந்தால்
வடவரா லுந்தன் வாழ்வு முடிந்தால்
வாளும் வேலும் வடவரைச் சூழும்!

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

[வள்ளுவர் காலத்திய அரசியலில் பெரிதும் நீர் வளமும் நில வளமும் வேண்டப்படுகிறது. அதேபோது அமைதியும் வேண்டப்படுகிறது.]

3

'பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும்' குறளின் கருத்தைத் தற்கால அரசியல் கண் கொண்டு நோக்குவோர் விபரீதப் படுத்தியும் பொருள் கொள்கின்றனர்.

எப்படி எனில்: பல் குழு என்பதை பலவித அரசியல் கட்சிகள் என்றும், பாழ் செய்யும் உட்பகை என்பதை, அரசியல் கட்சிகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருக்கும் நிலை என்றும், வேந்தலைக்கும் கொல் குறும்பு என்பதை, அரசைக் கவிழ்க்கத்தக்க 'புரட்சி' என்றும் வலியப் பொருள் கொண்டு இடர்ப்படுவோரும் இருக்கின்றனர்.

அத்தகையோர். வள்ளுவன் காலத்து அரசியலையொட்டி குறளை ஆராயத் தவறியவர்களே ஆவர்.

இவ்வாறான முடியாட்சியின் கீழ் இருந்ததால்தான் நாட்டு மக்கள் சிறப்பாகத் தமிழர்கள் சிந்திக்க இயலாதவர்கள் ஆயினர். சிந்தனை குன்றுவதற்கு சுகவாழ்வும் ஒரு காரணமுமாம்.

அக்காலத்தில் தமிழர்கள் சுக வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதற்கு, ஏராளமான சான்றுகள் உள்ளன. குடி தழீஇக் கோலோச்சிய மன்னர்களும் வற்றாத வளங் கொழிக்கும் நல்ல நாடும், சுரண்டலற்ற நிலைமையும் இருந்தால் சுக்வாழ்வுக்குக் குறைவேது?

பன்னெடுங் காலமாக அப்படிப்பட்ட சுகவாழ்வில் திளைத்த தமிழர்கள் சிந்தனையற்றவர்களானதில் ஆச்சரியம் இல்லை.

காங்கிரசின் பெருந்தவறு.

முடியாட்சியின் கீழ் இருந்த மக்களைக் குடியாட்சிக்குத் தயார் படுத்துவது சிரமமும், அருமையும், முக்கியமும் வாய்ந்ததாகும். அதைச் செய்ய காங்கிரஸ் தவறிவிட்டது.

குடியாட்சி — மக்களாட்சி என்னும் பெயர்கள் நமக்குப் பழக்கமில்லாதவை. எனவே, அதைப்பற்றி விரிவான விளக்கங்களும்; தெளிவுரைகளும் தேவை! இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு காங்கிரசையே சேரும்.

ஏனெனில்:- நமது நாட்டில் அரசியல், குடியாட்சி, சுதந்திரம் என்கிற வார்த்தைகளை ஆதியில் கற்றுக் கொடுத்தவர்கள் அவர்களே!

ஆனால், அந்தச் சொற்களைப் பொருள் உணரும்படி போதிக்கவில்லை. மாறாக, வெற்றுச் சொற்கள்—மந்திரங்கள் போலவே போதிக்கப்பட்டன!.

காங்கிரஸ்காரர்கள் உண்மையிலேயே மக்களைக் குடியாட்சிக்குத் தயாரிக்க விரும்பி இருந்தால், முதலில், நாட்டைப்பற்றி விளக்கி, இரண்டாவது அரசியலைப்பற்றி விளக்கி, மூன்றாவது பொருளாதார விளக்கம் கொடுத்து, இறுதியாக அந்நிய ஆதிக்கத்தை வெறுக்கும்படி தூண்டி இருப்பார்கள்.

அவர்கள், இவ்வாறு முறைப்படி மக்களைத் தயாரிக்கவில்லை! முறைகேடாகக் கடைசியில் செய்ய வேண்டியதை முதலில் செய்தார்கள்—அந்நிய ஆதிக்க வெறுப்பை மட்டும் கற்றுக் கொடுத்தார்கள்!

முறையான அரசியல் அறிவு மக்களுக்கு ஏற்பட்டிருந்தால், இப்போது நாம், இந்த விளக்கம் தரவேண்டிய அவசியமே ஏற்பட்டிராது.

நாடு என்பதும், சமுதாயம் என்பதும், அரசியல் அகராதிப்படி ஒரு பொருட்சொற்களே! 'தேசிய இனம்' என்பதன் மற்றொரு பெயரே சமுதாயம் என்பதாகும்.

> "சரித்திர அடிப்படையில் உண்டான பொதுமொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு, மனோபாவம், பொதுக் கலாசாரம் உடைய சமுதாயமே ஒரு தேசிய இனம்"

என்று, தோழர் ஸ்டாலின், அவருடைய Marxism and the question of Nationalities என்னும் நூலில் கூறியிருப்பது இங்கு ஆராயத்தக்கது.

வாசகர்களுக்கு

நண்பர் எம், எஸ். ராமசாமி அவர்கள் வரைந்துவரும் இத்தொடர் கட்டுரையைப் பாராட்டிப் பலர் மடல் தீட்டியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இக்கட்டுரையில் நாடு என்ற பொருளுக்கு மேலும் விரிவான விளக்கங்கள் தரப்படுகிறதாதலால் வாரந்தோறும் வாசகர்கள் இக்கட்டுரையைத் தொடர்ந்து வாசித்து விவரம் அறியவேண்டுகிறோம். (ஆ—ர்)

இயற்கையாகவும், இன்றியமையாததாகவும், இருக்கின்ற சில உணர்ச்சிகளின் வசப்பட்டு, சிதறாமல் கட்டுண்டு நிற்கும் ஒரு பிரதேச மக்கள் கூட்டமே 'சமுதாயம்' என்று அழைக்கப்படும்.

எனவே, நாடு என்னும்போது, அது சமுதாயத்தைக் குறித்து, சமுதாயம், அரசியலைக் கொண்டதாகி, அரசியல், பொருளாதார பயன் தருவதாக அமையும்,

சமுதாயம், அரசியல், பொருளாதாரம், என்பவைகள், வேறு வேறு பெயர்களால் குறிக்கப்பட்டாலும், அவை, ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்ட அரசின் அங்கங்களாகும்.

சரீரம் என்பது தலை, மார்பு, கால் என்று தனித் தனியாகக் குறிக்கப்பட்ட போதிலும், அவைகள், ஒன்றுக் கொன்று எவ்வளவு இன்றியமையாத உறுப்புகளாக இருக்கின்றனவோ, அதைப்போலவே, சமுதாயம், அரசியல், பொருளாதாரம் என்பனவும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத அரசின் அங்கங்களாகும்.

சமுதாயம் வயல் என்றால், அரசியல், அதில் நடும் பயிராகவும், பொருளாதாரம், பயிருக்குரிய உரமாகவும் கொள்ளலாம்.

பண்படாத நிலத்தில் பயிர் செய்ய இயலாது. உரமில்லாத நிலத்தில் பயிர் சரியான பலன் தராது.

பண்பட்ட வயலுக்கு வரப்பு அவசியம். அதுபோலவே, நாட்டுக்கு எல்லை அவசியம். இதுதான் அரசியலின் ஆரம்ப அரிச்சுவடி.

வயலுக்கு வரப்பு ஏன்? பரந்த வெளியில் பயிர் செய்தால் என்ன? என்று கேட்கலாம்.

நிலப் பரப்பை மேற்போக்காகப் பார்த்தால் சமவெளியாகத் தோன்றும் அதே நிலப் பரப்பில் நீரோட்டம் எப்படியிருக்கிறது என்று கவனித்தால் ஒரு திசைக்கு ஒரு திசை பெருத்த மேடு பள்ளங்கள் காணப்படும்.

அதுபோலவே ஒரே நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் பலவித வேற்றுமைகளை இயற்கையிலேயே பெற்றிருக்கிறார்கள்.

எந்நேரமும் நீர் நின்று பயிர் செய்ய வேண்டிய வயலுக்கு, வரப்பில்லையானால் மேட்டு நிலம் வரண்டு பாழாகும். தாழ்ந்த நிலம் நீர் தேங்கிப் பாழாகும்! இயற்கையிலேயே நீர்வளம் குறைந்திருந்தால் மேட்டு நிலம் நீரில்லாமல் கெடும். தாழ்ந்த நிலம் நன்கு பயன் தரும்.

நீர்வளமுள்ள இடத்தில் மேட்டிலும் பள்ளத்திலும், தேவையான நீரைத் தேக்க வரப்பு பயன்படும். வரப்பில்லையானால் வருந்தி உழைத்துத் தேக்கிய உரமும், தண்ணீரும் அயலானுடைய நிலத்தில் போய்ச் சேர ஏதுவாகும்!

இதே தத்துவம் நாட்டுக்கும் பொருந்தும். அரசியல் நெற்பயிருக்கு ஒப்பானது. பண்பட்டு உரங்கொண்ட சமுதாயத்தில் தான் அரசியல் நல்ல முறையில் சாகுபடியாகும்! நாட்டுக்கு எல்லையில்லையானால் நாட்டின் வளத்தை அயலார் சுரண்ட ஏதுவாகும்!

பூமி, ஒரே சமவெளியாகக் காணப்பட்டாலும் ஆங்காங்கு மேடு பள்ளங்களுடன், கரிசல், செவ்வல் வண்டல், மணல் என்பன போன்ற பல வகை இயல்பினைக் கொண்டதாகி, வெவ்வேறு பயிர் விளையத்தக்கதாக இருப்பது இயற்கை.

ஏற்கனவே. அரசியலை நெற்பயிருக்கு ஒப்பிட்டுக் கூறினோம். நெல்லிலும் பல இனம் உண்டு. சில நெல்லினத்திற்கு நீர் வளம் அதிகம் வேண்டும்! சிலவற்றிற்கு அவ்வளவு வேண்டியதில்லை! சிலவகை நெல் 3 மாதத்தில் பலன் தரும்! சிலவகை நெல் 6 மாதத்தில் பலன் தரும்! இந்த வித்தியாசங்களை ஆராய்ந்து பயிர் செய்வது, உழவர் கடன்.

அதுபோலவே சமுதாய பொருளாதார இயல்புகளுக்கு ஏற்றபடி அரசியல் அமைக்க வேண்டியது உண்மையான அரசியல் தலைவர்களின் கடன்!

ஒரே நிலப்பரப்பாக இருந்தாலும். ஆயிரக் கணக்கான கல்தூரத்தில் பரவி வாழ்கின்ற மக்கள் பலவித இயல்புகளை உடையவராக இருப்பது இயற்கையென்று ஏற்கனவே கூறினோம். அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தியோ, பலவந்தமாகவோ. அவர்களை ஒரே ஆட்சியின் கீழ், அடக்கி அமுத்தி வைப்பது அநீதி!

அவர்கள் எல்லோருமே ஒரே ஆட்சியின் கீழ் இருக்க முடியாது—இருந்தால், அவர்களில், பெரிய கூட்டத்தார் சிறியகூட்டத்தாரையும், வலிய கூட்டத்தார் எளிய கூட்டத்தாரையும், அடக்கி ஆதிக்கம் செலுத்தி ஆளத்துணிவர்! அராஜகம் தாண்டவமாடும்! இத்தகைய பலாத்கார ஆட்சி முறையைத்தான் ஏகாதிபத்திய — அந்நிய ஆட்சி என்று அரசியல் ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த நிலைமைதான் இன்றைய இந்திய அரசியலில் வெளிப்படையாக—ஆனால், மூடி வைக்கப்பட்ட நிலைமையில் இருக்கிறது!

அகில இந்திய அரசியல் பேசுவோர் எல்லோருமே, ஏறக்குறைய இந்தியாவையே—ஒரு துணைக்கண்டத்தையே 'நாடு' என்கிறார்கள். அவர்கள் இப்படிப் பேசுவதை ஆராயாத்தனம் என்றோ, தற்செயலாகச் சொல்கிறார்கள் என்றோ, கூறுவதற்கில்லை.

13-ம் பக்கம்

அறிவைக் கிளறும் கேள்விகள் கண்டு ஆத்திரம் அடைகிறார் அடிகளார்!

கொள்கை விளக்கம் தெரியாதெனில் கோபமும் வருமோ!

கனிகள் இருக்கும்பொழுது காய்களை உண்பதெனில் அது அறியாமையின் காரணமாக இருக்க வேண்டும்; அல்லது காய்களையே உண்டு பழக்கப்பட்டிருக்க வேண்டும்! அதுவுமில்லையெனில் காய்கள் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்து, கனிகளெலாட கண்ணுக்குத்தெரியாது இருந்திருக்க வேண்டும்! அறிவுக் கண்கொண்டு நோக்கும்பொழுது அவசியம் கனிகளெனும் அறிவுப் பெட்டகம் கிட்டியே தீரும் ஆனால் அருள் நெறிக்கண் கொண்டு பார்த்தால் கிட்டுமோ, கிட்டாதோ யானறியேன் பராபரமே!

அருள் நெறிக் கண் கொண்டு கனிகளைத் தேடியலைந்து இறுதியில் காய்களையே பெற்றுண்பதின் மூலம் 'அருள் நெறித்திருக் கூட்டத்தாரின் ஆதரவும், அன்பும், பெருமையும், புகழும் பெற்றிட முடிகின்றது' என்னும் காரணத்தாலோ என்னவோ, அறியாமையெனும் காய்களையே மேலும் மேலும் உண்ணத்தலைப்படுகின்றனர் சிலர்!

வையகத்திலே வாழக் கற்றுக்கொண்ட மனித சமுதாயம் அன்றிலிருந்து, இன்றைய வரைக்கும் எந்தவொரு முடிவான வாழ்வுத் திட்டத்தையும் அமைத்துக் கொண்டதாக சரித்திரமே கிடையாது—சொல்லப்போனல் நமது புராணங்களிலே கூட இல்லை! 'மனித சமுதாயத்திலே வாழ்வும், தாழ்வும் இயற்கையான சூழ்நிலையின் காரணத்தால் ஏற்படுகின்றது' எனினும் மனிதனின் சிந்தனையின் மாறுபாட்டால்—அவனின் செயலின் வேறுபாட்டால் வாழ்க்கை சோலையாக மாறுவதுமுண்டு பாலையாகப் போவதுமுண்டு! ஆனால் இந்த இரண்டிற்கும் இடைப்பட்டதொரு நல்ல நிலையை உண்டு பண்ணும் தன்மை அரசியலாரிடமில்லாமலில்லை. இவைகளையெல்லாம் ஒரு பக்கம் வைத்துவிட்டு ஆராயப்புகுங்கால மனிதசிந்தனைக்கப்பாற்பட்டதொரு சக்தி இருப்பதாகவோ, அந்த சக்தியின் காரணம் என்ன என்பதைப்பற்றியோ அன்றி அந்த சக்தி மனித சமுதாயத்தோடு ஒட்டி உற்ற முறையில் இயங்கி வருவதேன்! என்பதனையோ ஆராய்வதென்பது மனித வளர்ச்சிக்கே முட்டுக்கட்டையாகத்தான் இருக்குமே தவிர வளர்ச்சிக் கேற்ற செயலாகா.

எனினும் அந்த சிந்தனைக் கெட்டாததையே எண்ணி யெண்ணி எவ்விதத் தொண்டும் கடமையும் நல்லொழுக்கத்தையும்—மக்களுக்கென எவரும் செய்துவிட முடியாது. மக்களுக்கென்று ஒருவர் தனது கடமையைச் செய்ய முனைந்தால் அறிவுக் கனிகளை உண்ண வேண்டுமே யல்லாது 'அறியாமை' எனும் காய்களை உண்ணக் கூடாது! சிந்தனைக்கே எட்டாத ஒன்றுக்காக மனிதனுக்கு மனிதன் சண்டையிட்டுக் கொள்வதெனில் இதைவிட மடமையேது இகத்தில்! எனவேதான் அறிவியக்கத்தவர்களனைவரும் சின்னத் தன்மைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு உயர்ந்த—நோக்குடன் அறிவுக் கனிகளை அனைவரும் உண்ணக் கொடுத்து—உய்த்துணரச்செய்கின்றனர்! அப்படிமக்களுக்கு அள்ளித்தரும் ஆற்றலுடையோரனைவரும் அன்புவழிச் செல்வோராக இருக்கின்றனர்—இருக்கவேண்டும்.

அறிவுக் கனிகளை அள்ளித் தருவோர் அகிலம் தோன்றியது முதல், தோன்றித் தோன்றி மறைவதாகவே இருக்கின்றனர்—இன்னும் எவரும் அந்த முழு வேலையை முடித்தவர்களாகக் காணோம்! அறிவுக் கனிகளை அள்ளித் தருவோர்தான் இப்படியென்றில்லை. அறியாமையெனும் காய்களைத் தரும்—சிந்தனைக்கப்பாற்பட்டவற்றையே ஆராயமுனையும் அறிவுடையோரும் அப்படியே! நான் ஏதோ கதையளப்பதாக எண்ண வேண்டாம் தோழர்களே,

அண்மையில் மலைநாடு சுற்றிவந்த—இளைஞர் —இல்லையில்லை— மடஅதிபதி குன்றக்குடி அடிகளார்— அருணாசல தேசிகர்—பரமச்சாரியான 29 வயதுடையார்—நானிருக்கும் நகருக்கு வந்ததைப் பற்றியும் அவரைக்காண என்னை அழைத்த—என்னை அவர் கண்டது பற்றியுமேதான் செப்பப்போகிறேன்.

சைவம் தழைக்க, உழைக்க வந்த தேசிகர், சமயத்திற்கொத்த கருத்தைப் பரப்புவதின் மூலம் ஆங்காங்கு குழுமியெழும் மக்களின் பாராட்டுதலையும் அன்பையும் பெறுகின்றார்! ஆனால் அவரின் சமயோசிதப் பேச்சை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்து விட்டு அடிப்படையான கொள்கையை ஆராயப்புகும் பொழுது ஆச்சரியப்படத்தக்கதொரு நிலை ஏற்படுகிறது! மக்களை நல்வழி சொல்லி யழைக்க முன்வருபவர் எவரும் சிறந்த கொள்கை யுடையோராக—அக்கொள்கையை விளக்கிக் கூறுவோராக—மக்களிடம் கொள்கையை விளக்க தலைப்படுவதின் மூலம் மக்களையெல்லாம் ஒன்று சேர்த்து நல்வழி யழைத்து —அன்பையும்— கடமையையும்—நல்லொழுக்கத்தையும் வளர்க்க முனைவர். அதுதான் அறிவுடையோர் செயல், அறிவுக் கனிகளையுண்போர்காணும்—பெற்றிடும் பலன்.

ஆனால் அறிவுத் துறைக்கு மாறுபட்டவர்களின் செயலும் சொல்லும்—கொள்கையும் உருப்படியானதாக இருக்க முடியாதுதானே! அறிவுக் கனிகள் உண்பவர்கள் ஆத்திரமடையாது அவர்களின் "கொள்கை" பரப்புவர்—சொல்லையெல்லாம் செயலில் காட்டுவர். அதற்கு மாறுபட்டவர்கள் கொள்கையை விளக்கத் தெரியாது என்பது போலவே கொள்கையும் குறிக்கோளும் நிலையானதாக இருக்காது. அப்படித் தெரிந்திருப்போர் கொள்கையுடையோர் என்று தான் தம்பட்டமடித்து மடாதிபதி யாக்கப்பட்டு மக்களையெல்லாம் இன்னுமொரு ஆயிரமாண்டுகளுக்குப் பின்னே இழுக்க ஆசைப்படுகிறார் அருணாசல தேசிகர்!

நானிருக்கும் ஈப்போ மாநகரில் அடிகளார் அருணாசல தேசிகர் ஒருவார காலம் தங்கி யிருந்தார். அப்போது சில பொது மேடைகளை அமைத்து அவரின் கோமாளித்தனப் பேச்சைபெல்லாம் கொட்டினார்—அதற்கும் கைதட்டுவோர் சிலர் இருப்பதால்!

அவர் எங்களின் ஊரைவிட்டுப் பயணமாகும் இரண்டு தினங்களுக்கு முன்னர் சில கேள்விகளை யெழுதி அடிகளார் வரவேற்புக் குழுவின் செயலாளரிடம் கொடுக்கப்பட்டது. அவ்வினாக்களுக்கெல்லாம் ஈப்போவின் பொதுமேடையிலேயே விளக்கம் தரவேண்டுமெனவும் வேண்டியிருந்தேன் ஏன் இப்படி வேண்டிக்கொள்ள நேரிட்டதெனில் ஒரு ஊரில் எழுப்பும் கேள்விகளுக்கு மற்றொரு ஊரில் பதில் அளிக்கும் பழக்கத்தை அடிகளார் மேற்கொண்டதால் தான்! இதைக் கண்ணுற்ற வ. வே. கு. செயலாளர் என்னை அழைத்துவர ஆள் அனுப்பி இருந்தார். ஏனென்று சென்று வினவினபோது விளக்கினார் விடயத்தை இப்படி. உங்களின் வினாக்களின் விடைகளை யெல்லாம் ஈப்போ மேடையிலேயே சொல்லக் கேட்டிருந்தீர்கள். இதைப்பற்றி அடிகளார் சொல்லிவிட்டார். உங்களை நேரிலேயே சந்திக்க வேண்டும். "சந்தித்து விளக்கம் தரக் கடமை நமக்குண்டு" என்றும், மிகவும் ஆவல் கொண்டார் உங்களைப் பார்க்க" என்றும் வ.வே.கு. செயலாளர் சொல்லி குன்றக்குடியார் இருக்குமிடத்திற்கு என்னை அழைத்தார்,

பின்னர் மறுநாள் மாலையில் குன்றக்குடியார் இருக்குமில்லத்தை யடைந்தேன். சென்ற திங்களில் நான் கொடுத்திருந்த வினாக்களோடு இன்னும் பல வினாக்களையும் (மொத்தம் 23 வினாக்கள்) சேர்த்து எடுத்துச் சென்றிருந்தேன். வினாக்களை கேட்டார் குன்றக்குடியார், அவரிடம் வினாத்தாளைத் தந்தேன். வினாத்தாளை வாங்கின குன்றக்குடியார் "பெரியார் ஈ. வே ரா. வின் கேள்விகளுக்கு நான் பதிலளித்தேன், ஆனால் எனது கேள்விகளை யெல்லாம் மதிக்காத முறையில் எவ்விதமான பதிலும் இன்றையவரைக்கும் தரவில்லை ஆகவே பெரியார் கொடுக்க வேண்டிய பதில்களை யார் கொடுக்க முன்வருகிறார்களோ அவர்களுக்கே நான் பதிலளிப்பேன்" என்றார், "நான் பெரியாரின் பதிலைச் சொல்லவோ அல்லது வாதம் புரியவோ விரும்பவில்லை எனவே அழைக்கப்பட்டதிற் கேற்ப எனது வினாக்களுக்கு விளக்கம் மட்டுமே கொடுத்தால் நல்லது' என்று செப்பினதும் கேள்வித்தாளை சற்று கவனித்தார்.

வினாக்களின் தன்மையை—அல்லது வினாக்களுக்கு வேண்டிய பதிலை இயம்ப கொள்கையை விளக்கத் தெரியாததாலோ கோபக்கனல் வீசிற்று வார்த்தைகளில்! 'நான் எக்கட்சியின் சார்பிலும்—எதிர் நோக்குடனும்—வினாவெழுப்பி உங்களை சோதிக்கவும் வந்ததாக எண்ண வேண்டாம் (அவர் அப்படி எண்ணினார்) மேலும் பெரியார் தரவேண்டிய பதிலை நான் தரவும்வரவில்லை' என்று விளக்கின பொழுதுங்கூட குன்றக்குடி இளைஞர்—மடாதிபதி 'இந்து மதத்தின் வயதென்ன உங்கள் வயதென்ன நீங்கள் இந்து மதத்தின் தன்மைகளை ஆராயத் தலைப்படுகின்றீர்கள்' என்றார் இந்து மதத்தில் இருந்தும் நான் இந்து மதத்தை ஆராயாமல் எந்த மதத்தில் உள்ளவர் ஆராயவேண்டும்! இந்து மதத்தவன் இந்து மதத்தின் தன்மைகளை ஆராயாமல் வேறு யார் ஆராய வேண்டுமோ—அதிலும் வயதை எடை போடுகின்றார் மட அதிபதி!

29 வயதுடைய குன்றக்குடி இளைஞரே! நானும் திருப்பி மிகச்சுலபமாகவே கேட்டு விட முடியும் 'அன்பின் வயதென்ன! அறத்தின் வயதென்ன! அருள் நெறியின் வயதென்ன! நேர்மையின் வயதென்ன! ஆண்டவனின் வயதென்ன! இவைகளையெல்லாம் வளர்ப்பதாகக் கூறி, உய்த்துணரும் தன்மைகளை விட்டுவிடச் செய்யும் பிரசாரத்தைச் செய்ய மக்களிடம் வந்துள்ள உங்களின் வயதென்ன! நீங்கள் இவைகளையெல்லாம் முடிவு செய்து மக்களுக்குச் செம்மையாக எடுத்தியம்பும் வயதடைந்து விட்டீர்களா! மடாதிபதியெனும் தன்மைக் கேற்றவற்றையெல்லாம் அடைந்திருக்கிறீர்களா'! என்று,

ஆனால் அதுவல்ல கண்ணியம் என்பதால் அமைதியாக மேலும் உங்கள் விளக்கத்தை மட்டுமே விரும்புவதாக வலியுறுத்திச் சொன்னேன். அப்படியே மொழியையும்—அன்பையும் அருளையும் வளர்க்க முனைவோருக்கு ஏன் கோபம்! ஏதேனும் தவறான சொற்கள் எதிரிகள் உதிர்த்தால் இன்னும் ஏதேனும் அடாதவைகள் செய்தால் கோபம் உபயோகிக்கத் தக்கதுதான் அளவோடு.

குன்றக் குடியாரே கூறுகின்றார். 'அறிவை அளவோடுஉபயோகிக்கவேண்டும், இல்லையேல் அபாயம்' என்று அதே மூன்றெழுத்தை யுடைய 'கோபம்' அளவோடு உபயோகிக்க வேண்டிய ஒன்றே என்பதை மறந்துவிட்டார் போலும்.

அறிவு என்னும் சொல்லிலே அடங்கியிருக்கும் அபாயம் எந்தவிதத்திலும் கோபம் எனும் சொல்லிலே உள்ள அபாயத்திற்கு விட்டுக் கொடுப்பதல்ல அடிகளாரே! அன்பு என்னும் சொல்லிலே இருக்கும் பொருளைவிட எந்த விதத்திலும் கோபம் எனும் சொல்லில் அதிகப் பலன் காண முடியாதே அடிகளாரே!! ஆராய்ந்தறியும் ஆற்றல் மிக்கோர் உணர்வர் அன்பிலே இருக்கும் தனித்தன்மையின் சிறப்பு! அதே மூன்றெழுத்துடைய கோபத்திலே இல்லை என்பதை நான் பலமுறையிலும் வலியுறுத்தி இயம்பினேன் 'எப்பார்ட்டியிலேயும் (அவர் பாணி "பார்ட்டி") இல்லை என்று. ஆனால் அவர் எனக்குச் சம்பந்த மில்லாதவற்றை யெல்லாம் கொட்டியளக்க ஆரம்பித்துவிட்டார்.

பெரியார் எந்த சேரிக்குப்போய் பிரச்சாரம் செய்து விட்டார்! நான் போன சேரிகள் பல. நான் எத்தனையோ 'ஸ்கூல்'களை 'ரன்' பண்றேன் கம்பனின் கவிச்சுவைக்காக ஏதோ ஒரு இடத்திலே வர்ணித்திருக்கின்றான்—அதை வெளியே எடுத்துச் சொல்வதால் என்ன பயன்! ராதா 'ராமாயணம்' நடத்துவதால் மக்களுக்கு என்ன நன்மையேனும் இருக்கிறதா!—ஆனால் நான் செய்திருக்கும் வேலைகள் ஏராளம்—செய்கின்ற—செய்யப்போகும் வேலையும் அதிகம். இதையெல்லாம் சொல்வதால் தற்பெருமையாகச் சொல்வதாக எண்ணிவிடாதீர்கள்" என்று ஏதோ பெருமையின் சிறப்பையெல்லாம் 2 மணிநேரம் என்னிடம் சொல்லிவிட்டு மனதிலே நினைக்கக்கூடாத சொல்லை அடிகளார் கூறுகின்றார் தற்பெருமைக்கென்று சொல்லவில்லை என்று. கேள்வித்தாளை என்னிடம் திருப்பித் தந்துவிட்டு அதன் பின்னர்தான் அவர் பெருமை பேசுகின்றார்! விளக்கம் கொடுக்கவில்லை கொள்கைக்கு!

உங்கள் குறிக்கோளின் தன்மையை விளக்கிக் கூறுங்கள் என்று வினவினால் விளக்கம் செப்ப வேண்டிய வரைக்கும் "சிந்தித்துக்கூறுங்கள் உங்கள் கருத்தை" என்பது தான் சிந்தனைச்சுடர் கொண்டு வாழும்தலைவர்களின்—நல்லறிஞர்களின் கடமை. ஆனால் அன்பை வளர்ப்பதாக, அறநெறிகளை வளர்ப்பதாகச் செப்பும் குன்றக்குடி இளைஞர் இதயத்திலேயிருந்து கொப்பளிக்கும் கோபக்கனலை அவராலேயே அடக்க முடியாமல் வெளிக்கிளப்பி விட்டார்!

குன்றக்குடியாரின் கருத்துப்படி எனது தன்மான இயக்கத் தலைவர், தான் கொண்ட தகவுமிக்கக் கருத்தை மாற்ற மறுத்து நஞ்சருந்தியிறந்த சாக்ரட்டீசின் சரித்திரத்தோடு இணைந்துவிட்ட திராவிடப்பெருந்தலைவர், வள்ளுவனுக்குப்பின் தோன்றின இருபதாம் நூற்றாண்டின் நிலைக்கொத்த வள்ளுவனார் பெரியார் ஈ. வே. ரா. முதல் தி. மு. க. வின் ஆதரவாளன் வரைக்கும் வினாக்களுக்கு விளக்கம் தர முனையும்போது, அன்பின் அடிச்சுவட்டிலே நின்று பேசிடுபவர் விளக்கமுரைப்பவர் ஆண்டவனின் அற்புதங்களை யெல்லாம் அறிந்தவர், அருள் நெறியின் அவசியத்தை யெலாம் உணர்ந்தவர், அமைதியே சாந்தமே வரைப்பாடுபடுபவர் கோபக்கலையிலே விளையாட ஆசைப்படுகிறார் வெட்கம்! வெட்கம்!! வேதனைதரக் கூடிய அந்த விளையாட்டிற்குக் காரணம் அறிவைக் கிளரும் கேள்விகள்தான்!

இந்து மதத்திலே உள்ளவன் இந்து மதத்தை ஆராயக்கூடாதாம்! அதிலும் வயதை எடை போடுகிறார்! 'முகம்மதிய மதத்தைப் போற்றுகின்றீர்கள் எல்லாரும் இஸ்லாமிய மதத்திலே சேர்ந்து விடுங்கள்' என்று பிரச்சாரம் செய்கிறீர்கள். அதே போல கிருத்துவ மதத்திலே சேருங்கள் என்று போற்றுகின்றீர்கள் கலிலீயோ உலகம் இயற்கையால் உருண்டையானது என்று

தி.மு.கழகமும்

ஆலைத்தொழிலாளரும்

ஒரு நாட்டின் விடுதலை இயக்கம் வளர்ந்த நிலையில் அதன் பொறுப்புகள் அதிகமாவது இயல்பு என்பதுதான் உலக வரலாறு காட்டும் உண்மை. இந்தக் கட்டத்தை இன்று திராவிடத்தின் அடிமைத்தளை யறுத்து, அறியாமை இருளை போக்கி, சுதந்திர சமதர்ம குடியாட்சி அமைக்க அயராது பாடுபட்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வந்துள்ளது. குறிப்பாக ஆலைத் தொழிலாளரின் அவலநிலை கழகத்தை எதிர்நோக்கி நிற்கிறது ஆனால் இப்பிரச்னையில் நமது இயக்கம் இதுநாள் வரை அக்கரை கொள்ளாமலிருந்ததா? அதைத்தான் தொழிலாளர்கள் சிந்திக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகமாக—தாயகத்தின் விடுதலை வீரர்கள் அணிவகுக்கும் கோட்டமாக—இன்று திகழும் நாம், நமது தந்தையை சுயமரியாதை இயக்கமாக துலங்கும்போது நாட்டின்—திராவிடத்தின் நிலையென்ன! அறியாமை இருளில் மூழ்கி, பண்பை இழந்து தாயகத்தை மறந்து, வர்ணாஸ்ரமத்தை வகையாகப் போற்றும் மக்களாகவல்லவோ வாழ்ந்தனர்—வாழ்ந்தனரா? — அப்படி எண்ணிக் கொண்டிருந்தனர். அறிவுப்படை அமைந்தது, ஆரியத்தை தேர்ந்தது, அறிவொளி பரப்பியது, மக்களிடையே இருந்த மடமையை போக்கியது, விடுதலை விரும்பிகள் பெருகினர்—பெருகுகின்றனர்.

இத்தகு அளவிற்கு நாட்டை செம்மைப்படுத்த நாம் தேர்ந்தெடுத்த போராட்ட முனைகளிலெல்லாம் நமது தாயகத்தின் தனிப்பெரும் பண்புதான் தலையாயது. ஆம்! உலகிலுள்ள அத்தனை இனங்களிலுமில்லாத — சிறந்த உயர்ந்த பண்புதான். வீரமும்—விவேகமும், அறிவும்—ஆற்றலும், அன்பும் நிறைந்த நம் பண்டைய திராவிடப் பண்புதான்—மாநிலத்தில் மாற்றானுக்கு அடிமையாக வாழ்ந்த மக்களை வீறுகொண்டெழுந்து விடுதலை விரும்பிகளாக்கியது.

சுயமரியாதைச் சூறாவளி திராவிடத்திலே வீசத்தொடங்கிய நேரம், வடக்கையும்—தெற்கையும் தன் நாட்டு நல்வாழ்விற்காக ஒட்டுப்போட்டு ஆண்ட பரங்கியும், இன்று ஏக இந்தியா இரும்புப் பிடியிலே வைத்திருக்க விரும்பும் பனியாவும் இந்திய உபகண்ட உரிமைக்கு பேரம் பேசிக்கொண்டிருந்த காலம். இந்த சந்தடி சாக்கிலே நமது பழக்க வழக்கத்திற்கு மாறான, பண்பிற்கே ஒவ்வாத ஒரு கோட்பாடு, வழக்கம்போல வடக்கேயிருந்து வந்து நம் நாட்டிலே புகுந்தது தரணி புகழ தன்மானத்தோடு ஆண்ட இனம், தலைவிதித் தத்துவத்தால் வீழ்ந்த விதமே வடக்கத்தி வாடைதானே! அதைப்போலவே இதுவும் ஒரு 'பீடை', அறிவுப்படையின் பணியால் ஆணிவேர் ஆட்டங்கண்ட ஆரியம்இன்று புது தத்துவத்தின் நிழலிலே புகலிடைக்கிறது.

வருணாஸ்ரமம் வடக்கேயிருந்து வந்து திண்தோள் வீரன் திருவிடத்தானை பல்லைக்காட்டி புல்லைக்காட்டி—பண்பை பாழாக்கியது போலவேதான் 'வர்க்கம்' என்ற பேரால் நமது ஆலைத் தோழர்களை மயக்கி பண்பைப்பாழாக்கி வைத்திருக்கிறது. சந்தடிசாக்கிலே வந்த புதிய தத்துவம். இந்த நாட்டிலுள்ள அத்தனை மக்களின் விடுதலைக்கும் அயராது உழைக்கும் திராவிடர் இயக்கம் ஆலைத் தோழர்களைப் பற்றி இன்றுதான் ஏதோ புதிதாக அக்கரை கொண்டிருக்கிறது இதுவரை அம்மாதிரி ஒரு பகுதி தோழர்கள் இருக்கின்றனர் என்று தெரியாது என்று அர்த்தமில்லை திராவிடர் இயக்கமே ஒரு தொழிலாளர் முகாம்—உழைப்பாளிகளின் அணிவகுப்பு என்று அந்த நாள் முதல் இந்த நாள் சொல்லிலும் செயலிலும் காட்டி வந்துள்ளது அறிவியக்கம். அதற்கு பல எடுத்துக்காட்டும் உண்டு.

ஆனால் இன்று ஏன் ஏதோ தனியான பிரச்னை போல முன்னணிக்கு கொண்டு வரப்படுகிற தென்றால் அங்கேதான் பொதிந்துள்ளது முன்னாள் ஆரியமும் இந்நாள் வர்க்கமும் அமைத்த ஐக்கிய முன்னணியின் வேலைத்திட்டம். ஆரியம் முதல் நாலு சாதி உண்டாக்கி நாலாயிரம் சாதியாக பெருக்கியதுபோல வர்க்கமாக அமைத்து வர்க்கங்களாக மாறுகிறது. ஆரியம், நீ கவுண்டன் அவன் முதலியார், அவன் வீட்டிலே நீ உண்ணுதே உன் வீட்டிலே அவன் புக வேண்டாம். ஆனால் இருவரும் எனக்குக் கொடுங்கள் என்பதுபோல வர்க்கம், நீ உழைக்கிறாய் அவன் உறிஞ்சுகிறான் அவன் உன் சத்துரு என்றும் நீபொதுஜனம் தேய்ந்துபோய் வர்க்கமாகி விடுவாய் என்றும் பிரித்துவைத்திருக்கிறது. ஆலைத் தொழிலாளியின் பிரச்னையா அது மில்லுக்காரங்க விஷயம் என்று பொதுஜனமும் நாட்டு நடப்பா அது பொதுஜன சமாச்சாரம் என்று ஆலைத் தோழர்களும் கருதுகின்றனர். ஆனால் இருவரிடத்திலும் எனக்குப் பங்குண்டு என்று வாங்கி வாழ்கிறது வர்க்கப் போராட்டம், இதே ரீதியில்தான் அமைந்துள்ளது ஏக இந்தியா நடத்தும் தொழிலாளர் சேவையும், ஏக இந்தியா இணைப்பிலிருந்து பிரிந்தோரின் ஏக இந்தியா சேவையும். வர்க்கமோ சாதியோ எது எப்படியாயினும் ஏக இந்தியாவிற்கு ஆள் கிடைத்தால் சரி என்கிறது ஏக இந்தியா அமைப்புகள். ஆகவே வர்க்கமாக உள்ளோரை மாற்றவோ சாதியாக உள்ளோரை திருத்தவோ முயலுவதில்லை அகிலத்திந்தியாக்கள்!

இந்நிலையில் திராவிடத்தின் விடுதலை கீதம் 'வர்க்க' திரையைத்தாண்டி உட்சென்று ஆலைத்தோழனையும் 'வர்க்க' போதனையில் மயங்கி, திக்கற்ற நிலையில் தனித்திருந்த தாயக வீரர்கள், மயக்கம் தெளிந்து, இனத்தோடு இனம் சேர, இன அரசமைக்க, முரசு கொட்டி வருகின்றனர்: தமது 'ஐக்கிய' அணியும் உடைவதைக் கண்ட 'ஆரிய வர்க்க'ங்கள் அலறுகின்றனர், எப்படியாவது, ஓடோடிவரும் வீரர்களைத் தடுத்து நிறுத்த புதிய 'தத்துவார்த்தம்' தேடுகின்றனர். அதன் விளைவுதான் 'ஆலைத் தொழிலாளருக்கு இதுவரை தி. மு. க. சாதித்த தென்ன?' நாட்டு விடுதலை சோறு போடுமா! 'குட்டி பூர்ஷுவாக்கள்' என்றெல்லாம் விழிப்புற்ற தோழர்களின் மத்தியிலே தடைச்சுவர்கள் எழுப்பப்படுகின்றன. மீண்டும் திகைத்த தொழிலாளிகள் 'அறிவகத்தை' நோக்குகின்றனர் ஆர்வத்தோடு, ஆனால் கொஞ்சம் குழப்பிய நிலையில்.

இந்த நேரத்திலே தான் குழப்பிய தோழர்களுக்கு சிந்தை தெளிய அவர்கள் சென்று கொண்டிருந்த பாதை—'வர்க்க' போராட்ட பாதை—ஏழையின் இன்பபுரி வழியல்ல, அந்த வழி ஆழங்காணாத குழம்பிய மடுவிற்குச் செல்லும் வழி அவ்வழி சென்ற பல நாட்டுக்காரர் உலகிலே இன்பபுரி காணாமல், மாற்றுப்பாதை கண்டு மக்களாட்சியமைத்துள்ளனர் என்று விளக்கங்கொடுக்க வேண்டும். சிந்தைத் தெளியும் போது, எனதருமை நண்பனே! நீ சென்று கொண்டிருந்த பாதை வர்க்க போராட்டப்பாதை—கோரிக்கை போடுவதும், கோஷங்கள் போடுவதும், கோரிக்கை தோற்றால் கோஷத்தை மாற்றி காட்டிக் கொடுத்தான் கயவன் என்று மாற்றானை காட்டுவதும், ஏமாந்த தோழர்கள் என்றைக்கும் அவர்கள் அணியிலிருக்க திட்டங்கள் வகுப்பதும் தான் நீ சென்ற பாழ்பட்ட பாதை என்று சுட்டிக் காட்ட வேண்டும்.

உன்னை பெற்ற தாயகத்தை மறந்து வேறு நாடு செல்வம் கொழிப்பதையே இரவு பகலாக உனக்கு எடுத்துச்சொல்லும் எத்தர் நிறைந்த பாதை அது என்று திட்டமாக விளக்க வேண்டும். அதே நேரத்தில் 35 ஆண்டுகளாக பண்பிலிருந்து விலக்கப்பட்டிருந்த நம் தோழர்களுக்கு பண்பு பற்றிமொழிய வேண்டும். இத்தனைக்கும் ஊடே தோழனே! நாட்டிற்கு உழைக்க வரும் நல்லோனே! உன் உழைப்பிலே ஊரார் உண்ண, அதை இன்னொருவன் எடுத்துச்சொல்லி, உன் உரிமையை வாங்கிக் கொடுக்கும் கீழ்நிலை வேண்டாம். உன்னை நீயே ஆள, உன் நிலையை நீயே உயர்த்தப் போராடு வெற்றி கொள் என்ற வழியை காட்டுவோம். அதோ! வேறு நாட்டிலேயே இரவு பகலாக தனது கவனம் செலுத்தியவர்கள் 'இனம்' என்றால் 'வெறியர்' என்று அர்த்தம் சொன்னவர்கள் இன்று புது ரூபம் எடுத்து தமிழர் திருநாள் கொண்டாடுகின்றனர் பாகம்—பாகமாக பாரத மாதாபோன பின்பும் 'அகண்ட பாரதம் வேண்டுவோர்' ஐயோ! பாரத மாதாவின் பாதமாவது மிஞ்சட்டுமே என்று பவனி வந்து போகின்றனர். ஆலையூரார்களும், ஆட்சியூரார்களும் 'சோஷிய விசத்தை' காட்சிககு வைத்துள்ளனர். இந்த ஆர்பாட்டங்களைத்தாண்டி நில் நமது படை வரிசை கொட்டும் இன முரசொலி அதோ கேட்கிறது அதை மறக்காமல் அடிப்படையாக வைத்து ஆலைத் தொழிலாளர் பிரச்னையையும் மற்றவைகளையும் வெற்றியுறச் செய்வோமாக?

—வில்லவன் கோதை

25—2—55 முதல் துவங்குகிறது!

"விசித்திரச் சித்தர்கள்!"

புதுமையான கருத்துக் கொண்ட புரட்சிகரமான பகுதி!

விரைவில் திராவிடனில் எதிர்பாருங்கள்

சொல்லுகிறான் எனச் செப்பும் நீங்கள் பைபிள் (விவிலநூல்) சொல்லும் உலகப்படைப்பை ஆதரிப்பதாகவே கூறுகிறீர்கள் என்றெல்லாம் உளத்திலே உள்ள அத்தனை கோபத்தீயையும் கக்கிக்கி மிகவும் களைத்துப் போனார் அடிகள்! கேள்வித்தாளை என்னிடம் கொடுத்துவிட்டு விடை அளிக்காமல் தனது கோபக்கனலை யெல்லாம் கிளப்பி எனக்குச் சம்பந்தமிலாதவற்றையெலாம் பேசுகின்றார் அடிகளார் எனின் அவரை எடைபோடுவதெப்படி! ஆண்டவனுக்கெனயாரும் எதையும் செய்யவில்லை—கோவில்களில் முன்பெல்லாம் உடலை வெட்டி மருத்துவம் செய்ததாக கல்வெட்டிருக்கிறது. பள்ளிக் கூடம் நடத்தலாம் ஆனால் கோவிலை இடிக்கச் சொல்லுகிறார்கள் எனச்சொல்லுகிறார் அடிகளார்! இந்த இடத்திலே தான் அவர் இன்னும் நம்மைத் தெளிவாக உணரவில்லை யென்பதையும், நமது கொள்கைகளை, குறிக்கோளின் தன்மையை உணரக்கிடையா தென்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

நீங்கள் எதிர் பார்ட்டிகளை யெல்லாம் தெரிந்துகொள்வதில்லை. தேவாரம்—திருவாசகம் படிப்பதில்லை, எங்கள் மீட்டிங் பார்க்க வருவதில்லை. 'லைடு' பண்ணுவதாக 'ஃபாலோ' பண்ணுவதாக இல்லை யென்றெல்லாம் சொன்ன அடிகள் அவரின் கருத்துப்படி எதிர்பார்ட்டிகளை எந்தளவு உணர்ந்துள்ளார் என்பதைத் தெரியலாம். புலவர் குழந்தையின் திருக்குறள் உரையைக் குறை கூறுகின்றார் அடிகள். அதேசமயம் கம்பராமாயணத்தைக் குறை கூறுகிறீர்கள்—கம்பன்கவிச்சுவைக்காக ஏதோ தொடை தெரிவதாக வர்ணித்தான் என்பதையும் பிரசாரம்செய்கிறீர்கள். அதைவிட சிறந்த இலக்கிய வேதையாகிலும் செய்தீர்களாவென்றால் இல்லை. கம்பராமாயாணத்தை படிக்காதவர்கள் கம்பரசத்தை மட்டுமே படித்துவிட்டு ஏதோ சொல்கிறார்கள் என்றெல்லாம் சொல்லும் அடிகள் புலவர் குழந்தையுரையைக் குறை கூறுகின்றார். புலவர் குழந்தையின் திருக்குறள் உரையைவிட இவர் எதையேனும் சிறந்தது செய்திருக்கின்றனரா! என்பதைக் கூறக்காணோம்! கூறமுடியாதே!! அண்ணாதுரையார் 'சொர்க்கவாசல்' 'வேலைக்காரி' எழுதுகிறார்களே தவிர—மக்களுக்குப் பயன்தரக் கூடியதெதையும் செய்தார்களில்லை! ராதா "ராமாயணம்" நடத்துகிறார் யாருக்கு நன்மை இதனால். நாணயத்தை வைத்திருட்பவன் படத்திற்குக் கொடுத்து விடுகிறான்—நாடகத்திற்குத் தந்து விடுகிறான் இதனாலென்ன நன்மை! என்றெல்லாம் எதையெல்லமோ கொட்டியளந்தார்!

அவரின் ஆத்திரத்தாலோ என்னவோ அவரையே மறந்து உண்மையை வெளியாக்கினார். "நான் எல்லாச் சுக போகங்களையும் அடைவதாக சிலர் நினைக்கிறார்கள். நானும் மனிதன் தானே! எனும் சொற்கள் பரமச்சாரி—இளைஞர் குன்றக்குடியார்— மடஅதிபதி எண்ணக் கூடாதது, கஞ்சாச் செடி வளர்த்த எண்ணத்தினாலோஎன்னவோ அப்படிச் சொல்லிவிட்டார்!

'கண்ணியமும் கட்டுப்பாடும் தமிழனுக்குத் தேவை'யெனச் சொன்னார் ஆனால் அடிகளாரிடமிருந்து அடுத்த பகுதியில் வந்து பார்க்கும் போது சூ (Shoe) வைக் காணோம்! முருகப் பெருமான் குடியிருக்குமிடத்திலேயே கண்ணியமும் கட்டுப்பாடும் விலைகூறப்படுகிறதே! தி. மு. க. மாநில மாநாடு நடந்தபோது சென்னையிலே இருக்கும் அத்தனை மக்களும், இன்னும் இலட்சக்கணக்கான மக்களும் கலந்து கொண்டார்கள் அந்த மாநில மாநாட்டில் ஒலி பெருக்கியின் மூலம்மணிப்பர்ஸையும், மூக்குக் கண்ணாடியையும் காணோம் எனக் கூறினமாத்திரத்திலேயே எடுத்தவர் கொணர்ந்து ஒப்படைத்தார். அங்கே கண்ணியமும், கட்டுப்பாடும் இருக்கிறதா? அன்றி முருகப்பெருமானின் திருக்கோவிலிலேயே ஒரு சிலர் இருக்குமிடத்திலேயே திருடு போகின்றதே இங்கே கண்ணியமும் கட்டுப்பாடும் இருக்கிறதா? பித்தச் செருப்பணிந்தவர்கள் மறதியாகக்கூட சூ(Shoe)வை மாட்டிச் செல்ல முடியுமோ, என்னவோ! அதுவும் அடிகளார் இருக்கும் திருக்கோவிலிலா இப்படி நடந்து கொள்வது!

நமது இளம் அடிகளாருக்கு வணக்கம் செலுத்தவில்லையே என்று ஏக்கம் உண்டாகிறது. ஏ அம்மையப்பா—அருள்நெறி நேசா கைலாய வாசா! அடிகளார் ஆங்கிலத்தையும், கோபத்தையும் அடிக்கடி உபயோகிக்காமல் அவரைத் தடுத்தாள் கொள்வீராக!

பு. ச. கைவல்யம்

கர்நாடக தி. மு. க. அரசியல் மாநாடு : வரவேற்புத் தலைவர் உசேன் சொற்பொழிவு

பேரன்புமிக்க பெரியோர்களே! பேரறிஞர் அண்ணு அவர்களே! அன்புள்ள தாய்மார்களே! தி. மு. கழக முன்னணி வீரர்களே! மறுமலர்ச்சி உலகத்தை ஆக்கவல்ல திராவிட இளைஞர்களே! உங்கள் அனைவருக்கும் எனது பணிதலான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேற்று (12-2-55) காலை முதல் இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் நீங்கள் கண்டும்—கேட்டும் வருகிறீர்கள்! திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்கள், சொல்லின் செல்வர்கள் சிறந்த பல கருத்துக்களை தேன் தமிழோடு கலந்து விருந்து சமைத்தார்கள்! அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு ஒவ்வொன்றும் நெளிந்துபோன உள்ளங்களையும் நிமிர்த்துவதாக இருந்தது! மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் இந்த சமுதாயத்துக்கு பிடித்த சனியன் இன்ருேடு தொலைந்துவிடுமோ என்று எண்ணும் விதத்திலே சொல்மாரி பொழிந்தனர். குன்றிவிட்ட தன்மான உணர்ச்சி மீண்டும் குறுத்துவிட தொடங்கி விட்டது! சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் அமைத்துத் தந்த படிக்கட்டுகளைவிட சிறந்தவை வேறு யாரால் செப்பனிட முடியும்?

நல்ல கருத்துக்கள் முதலில் மக்களால் உதாசினம் செய்யப்பட்டாலும், அந்த சமுதாய சந்ததியினர் மெல்ல மெல்ல சிந்தித்து இறுதியில் ஏற்றுக் கொள்ளத்தான் செய்கிருர்கள்.

அத்தகு பொன் கருத்துக்களை வழங்கிய வழிகாட்டிகளின் வாழ்க்கை வரலாற்றை நேற்றெல்லாம் கேட்டீர்கள்.

ஆனுல் நமக்கு அரசியலிலே உள்ள அந்தஸ்து என்ன என்று எண்ணும்போது தான் கர்னுடக திராவிட முன்னேற்றக் கழக மாநாடு, மலடோ என்று சந்தேகிக்கப்பட்ட தாயுக்குப் பிறந்த குழந்தையைப் போன்றதாகும். பெரியார் நகரத்திலே பதின்மரும், அக்கிப்பேட்டையிலே ஐவரும் இந்த இயக்கத்தை வைத்துக் கொணடிருக்கின்ருர்கள். எல்லோரும் ஏழைகள்......இப்படி பேசப்பட்டது உண்மைதான். நாம் அனைவருமே ஏழைகள். பணக்காரர்கள் ஒரு காலத்தில் இருந்தார்கள். பதவி நம் கட்சியிலே ஒன்றுமில்லையென்று தெரிந்ததும், நாம் புரட்சிப் பாதையை நோக்கிப் போகிருேம் என்று தெரிந்தவுடன் பக்குவமாக ஒதுங்கிவிட்டார்கள்.

ஏன், பட்டதாரிகளும் நம்மோடு ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கத்தான் செய்தார்கள். நம்மேல் ஆரியாகளால் ஆயிரமாயிர ஆண்டுகளாய் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் இழிவான பட்டத்தைவிட வெள்ளையன் கொடுத்த பட்டம் மேலானதா என்று கேட்டோம். அவர்கள் திசை தெரியாமல் ஓடி மறைந்தார்கள். மாநாடு கூட்டப் போகிருேம் என்று கூறினேும் நாம். இதுகளால் முடியக்கூடிய ஒன்ரு என்றனர் மாற்றுக் கட்சியினர்! மக்கள் சந்தேகக் கண்களோடு பார்த்தனா நம்மை. ஏன் நம்மிலே பலருக்கு மாநாடு நடைபெறுமா என்பதிலே சந்தேகம்தான். மாநாட்டு தேதியை நிர்ணயித்த பிறகு, இடத்திற்காக ஒன்றரை மாதகாலம் இந்த சாக்கார் நம்மை அலையவிட்டது! அவ்வளவு அலைந்தும், அரும்பாடுபட்டும் இறுதியில் இடம் தரமுடியாது என்று சர்க்கார் கைவிரித்து விட்டனர்! எனினும் நம்தோழர்களின் இடைவிடா முயற்சி, சலியா உழைப்பு காரணமாக இன்று மாநாடு நடைபெறுகிறது. இந்த வெற்றிக்காக உழைத்த எல்லா தோழாகளுக்கும் என் இதய பூர்வமான நனறியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நாமோ மிகச் சாமான்யர்கள்; நமக்குரிய பணியோ மிகமிகப் பெரியது; நம்மிடம் அவ்வளவு பொருளாதார வசதி ஏது என்று பேசப்பட்டது! நாம் சாமான்யர்கள் தான், நம்மிடம் பொருள் வசதி இல்லை என்பதும் உண்மையேதான்; ஆனுல் இந்த சமான்ய ஏழைகள் இதுவரையில் சாதித்தவற்றை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். தி. மு. கழகம் சீமான்களுக்காக போடப்பட்டிருக்கும் சோபா ஆசனமல்ல, நமக்குத்தெரியாதா இது ஏழைகள் சேகரித்த செப்புக் காசுகளாலும் அவர் தம் சலியா உழைப்பாலும் அமைக்கப்பட்ட அறிவுக் கோட்டை என்று! தி. மு. கழகம் பணக்காரர்களின் கஜானுவை நம்பி என்றும் வாழ்ந்ததில்லை, இனி வாழப் போவதுமில்லை! எனவேதான் கூறுகிறேன். அண்ணுவின் அறிவுப்படை ஒருக்கால் ஏழையாக இருக்கலாம், ஆனுல் அது கோழையாக எக்காலும் இருக்காது.

கண்ணியம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி இவைகளை அடிப்படையாக வைத்து பயிற்சி தரப்பட்ட அறிவுப்படை பணிக்களம் நோக்கிப் புறப்பட்டது; ஐயப்பாடுகள் அகன்றன. இதோ......இந்தப் பொன்னுளன்று பரந்த கடல் அளவிலே, மாவீரன் மஜித் பந்தலிலே சீர்திருத்தம் மதை கைலாசம் அரங்கத்திலே கூடியிருக்கிருேம்! உங்கள் திருமுகங்களைக்காண என் உள்ளமெல்லாம் பூரித்து வீங்குகிறது தோழர்களே! என் வாழ்விலே என்றுமே பெருத மகிழ்ச்சி இன்று நான் பெருகின்றேன். திராவிடத்தின் விடுதலைக்கு பிரமாண்டமான தோர் படை திரணடு நிற்பதைக்காண கண்கள் குளிர்கின்றன! இன்னமும் யாருக்காவது சந்தேகமிருந்தால் நான் அவர்களுககுக் கூறுகிறேன், அறிந்தோ, அறியாமலோ எம்மைப்பற்றி உங்கள் உள்ளத்திலே வளர்ந்துள்ள அழுக்காற்றை துடைத்துக் கொள்ளுங்கள்! எம்மைச் சரியாக புரிநது கொள்ள முயலுங்கள் என்று கேட்டுக் கொளளுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் கள்ளியும் காளானும் நிரம்பிய காடல்ல, அது ஓர் அழகான மலர்ச்சோலை, அந்த சோலையிலிருந்து வீசும் தென்றல் சமூகத்தைப் பிடித்தாட்டும் பிற்போக்கு என்ற நோயை நிச்சயமாக போக்கும்! கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னுல், திராவிடர், திராவிடம் நமது நாடு என்று நாம் கூறிய போதெல்லாம் நம்மைத் தூற்றினுர்கள்! திராவிடர் என்று சொன்னதும் ஏதோ உலகத்திற்கே அழிவு வந்து விட்டது போல் எண்ணி நம்மீது கல்லை வீசி எறிந்தனர்! கண்டனங்கள் பறந்தன, சீர்திருத்தம் பேசக்கூடிய நாம் வெளியில் நடமாடுவதே அச்சத்திற்குரிய ஒன்ருக இருந்தது அன்று! இப்போது நிலைமை அதுவல்ல இஸ்லாம் மதத்திலே பிறந்த நானும், கிருஸ்துவ மதத்திலே பிறந்த நண்பர் பிரான்சிசும் இந்து மதத்திலே வந்த பல நண்பர்களும் நம்மை திராவிடர்கள் என்று ஒப்புக் கொண்டுத்தான் தி. மு. கழகத்தில் பணியாற்றி வருகிருேம்! இதனுல் நாம் கெட்டு விட்டதாக யாராவது கூறமுடியுமா?

பெங்களூரில் பெரும்பாலும் தமிழர்கள் தான் அரசியல் இயக்கங்களை சார்ந்திருக்கிருர்கள் என்றும், கன்னடியர்கள் தமிழர்களிடம் எச்சரிக்கையோடு இருந்தொழுக வேண்டும் என்றும், நமது சமஸதான சாக்காரின் பொறுப்பான அதிகாரி ஒருவர் அணமையில் கூறினுர்! நான் நமது கன்னடத் தோழர்களுக்கு கூற ஆசைபபடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொருத்த வரையில் நீங்கள் ஒன்றும் தவருகப் புரிநது கொள்ள வேண்டாம். இந்திய உபகண்டத்திலுள்ள மற்ற யாரையும் விட நாம்தான் உஙகளின் உணமையான சகாக்களாவோம். தமிழகம் நமது இடது கண் என்ருல், கன்னடம் நமக்கு வலது கண போன்றதாகும். கன்னடா் நாடு கன்னடர்க்காக வேண்டும், கன்னடத்தை பிணைத்திருக்கும் டில்லியின் அரசியல், பொருளாதாரப் பிடிப்புகள் துண்டிக்கப்பட வேண்டும். கன்னடத்தின் முன்னேற்றத்திற்கான எல்லா வழிவகைகளும் செய்யும் உரிமையினை நாம் பெற்ருக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக பாடுபடும்! மொழிவழி பிரிக்கப்பட்ட கன்னட மாநிலம் இனவழி திராவிடக் கூட்டாட்சி இணைப்புக்காக, கர்நாடக திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும். இதுதான் நமது அடிப்படை லட்சியமே தவிர கன்னடத்தை யாருக்கும் காட்டிக் கொடுத்துவிடமாட்டோம்.

எனவே கன்னட மெய்யன்மார்களே தமிழர்களைப்பற்றி நீங்கள் அஞ்சவேண்டாம். நமது கொள்கையைப்பற்றி விளக்கம் தேவை யென்ருல் நம்மை நேரில் சந்தித்துப் பேசி தெளிவு கொள்ளுங்கள். அதற்காக பண்டார சன்னதிகளை நோக்கிப் போகாதீர்கள். தி. மு, கழகத்தின் உண்மையான உருவம் அங்கே ஆத்மீகத் திரைக்கொண்டு மறைக்கப்பட்டுவிடும்.

கன்னடத் தோழர்களுக்கு இன்னமும் நமது கொள்கைகள் சாிவர எடுத்துக் கூறப்படவில்லை. அதற்கான சாதனங்கள் நம்மிடமில்லை. நமது உண்மையான நோக்கத்தை கன்னடியர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டால், கர்நாடக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் வரிசையிலே நிற்கப்போகிருாகள் அவாகள் தாம் என்பதில் ஐயமில்லை.

உதாரணததிறகு ஒனறு சொல்லுகிறேன் 1952-ம ஆணடு ரயில நிலையததில் உள்ள இந்தி பெயா அழிப்புப போராட்டததிறகு நமது படை புறப்படடுச சென்றபோது, சில கன்னடிய நண்பாகள ஒரு போலீஸ் அதிகாரி உடபட ஏன் இந்தியை அழிக்கறீாகள்? என்று கேட்டாாகள். அதோ பாருஙகள்......இநதபன தாளடியிலே நமது தாய் மொழியாம கன்னடம் கேவல் செய்யப்படுகிறது. என்று சுட்டிக் காட்டினேும், "Down with Hindi" எனறு நம்மோடு கூவினுாகள், நமது அறபபோா அமைதியான வெற்றியுடன் நடந்தது! இந்த உதாரணம ஒனறே போதும் கன்னடியாகள நம்மை ஆதாிக்கிருர்களா இல்லையா என்பதை தெரிநதுக கொள்ள!

இப்படியே நமது ஒவ்வொரு கொள்கைகளும் அவர்கள் புரிந்து கொள்ளும விதத்திலே கூறப்பட்டால் அடுதத கா்நாடக திராவிட முனனேற்றக கழக இரண்டாவது மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக நான இருக்க மாட்டேன. என தமிழ் அனபர்களும இருக்கமாட்டார்கள். கன்னடிய நணபாகளே அதைச் செய்வாாகள் எனபதைத்தான கூறுகிறேன. அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை.

இங்கே கன்னடியரும், சென்னையிலே தமிழாகளும் வடநாட்டுச் சுரண்டலால் தாக்கப்படுகின்ருர்கள் என்ருல், கன்னடியன், பக்கத்தில் கூச்சலிடும் தமிழனை திரும்பிப்பாாக்காமலா இருப்பார்கள்! இருவருககுமிடையே ஒரு கூட்டுறவு ஏற்பட்டு விட்டால், அடிக்கும் அந்த ஆதிக்கக்காரனின் கதிதான் என்னவாகும். இந்த மாநாடு அந்த எதிர்க் காலத்தைத்தான் முன்கூட்டியே எச்சரிக்கை செய்கிறது. நான் நமது அணணு அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது தாயகத்தின் மீட்சிககான வகையிலே கோறப்படும் எல்லா விதமான தியாகங்களையும் தர கன்னடம் எப்போதும் காத்திருக்கிறது. இந்த சமுதாயத்தை மூடி இருக்கும் மாசுகளைத் துடைக்கும் சக்தி எங்கள் ரத்தத்திற்குத்தான் உண்டென்ருல், தயங்காமல் தருகிருேம் என்பதைத் தெரிவித்துக் கொளவதுடன், திராவிடர்கள் அணிஅணியாக திரண்டு வாரீர் என்று அனைவரையும் அழைக்கிறேன். சிங்கத் தமிழர்களே—வருக! வீரமிக்க திராவிடத்தின் வெஞ்சமர் சீயங்காள் தாய் நாட்டை மீட்டிடுவோம், தரணி போற்ற வாழ்ந்திடுவோம் வருக—வருக வென்று கன்னடத்தின் சார்பிலே கைகூப்பி வரவேற்கிறேன்!

சிறுகதை

தாரமா? தங்கையா?

மூனா.பொன்னருள்

இரவு மணி பத்து பத்தரை யிருக்கும் புத்தகம் ஒன்றையெடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். வெளியில் மழை சோவென பெய்து கொண்டிருந்தது. இடையிடையே மழை என்னிடம், வாழ்விலும் இடியும் மின்னலும் உண்டென்று கூறிற்று. 'மழை யில்லை மரம் நடுவோம்' என்று மரம் நட்டு அவையும் வாடிபோக 'நாத்திகர் பெருக்கமே நாட்டில் மழை இன்மைக்கு காரணம்' என்று சிலர் பேசிச் சென்று பின்பு 'பஜகோவிந்தம் பஜகோவிந்தம்' என்று குடுமி தலைகள் கூட்டம் போட்டும் பெய்யாத மழை இப்போது பெய்கிறதே! என்று பலகணி வழியாக வெளியே பார்த்தேன். மின்னல் ஒளியில் யாரோ மழைக்காக ஒதுங்கி நிற்கக் கண்டேன்.

கதவை திறந்து 'யாரையா?' என்று வினவினேன். ஒன்றுமில்லிங்க...மழை ...என்று பதில் குரல் கிடைத்தது. அப்போதுதான் பெண் என்று தெரிந்தேன். என்னம்மா...இந்நேரம் தனியா ...நீங்க யாரு! உள்ளவாங்க என்றேன்.

உள்ளே வந்தாள். வேறு யாரும் இல்லாதது கண்டு தயங்கினாள். தவறாக எண்ண வேண்டாம். அம்மா உட்காருங்க என்றேன். என் கட்டிலில் உட்கார்ந்தாள்.

நான் நாற்காலியில் இருந்து கொண்டே நீங்க யாரு...இந்நேரம்... என்று கேட்டு வைத்தேன். என் கேள்வி அவள் புண்பட்ட உள்ளத்தை மீண்டும் வேதனைக்காளாக்கி யிருக்க வேண்டும். கண் கலங்கி கண்ணீரை சேலை முனைப் பால் துடைத்துக் கொண்டாள். ஆம் வெகு நேரம் கண்ணீர் வடித்திருக்க வேண்டும். அப்போதுதான் ஏன் வினவினேம் என்று தோன்றிற்று. ஓரிரு வினாடி அமைதி நிலவிற்று. அதனிடையே அண்ணா! நான் த...வ...றி...ய ...வ...ள் என்று குழந்தைகள் சில வேளைகளில் தாங்கமாட்டாது தேம்பி தேம்பி அழுவார்களே அதுபோன்று தோவென்று அழுது கண்ணீர் விட்டாள். அமைதி நிலவிற்று. நானும் பேசாமலிருந்தேன்.

நான் என்னைப்பற்றி எண்ணினேன், தவறியவர்கள் ஏராளம். அதிலும் ஆண்கள் தொகை ஏராளம்! ஏராளம்! ஆனால் ஓரிரு பெண்கள், நேரத்தின் சதியால் தவறும்போது ஊரார், உற்றார்! பெற்றோர் ஏன்? சமூகமே அவளை 'விபச்சாரி' என்றோர் புதுப்பட்டம் சூட்டி அன்னை வழியை அனாதையாக்கி விடுகிறதே! இனி இவள் எப்போதும் சமூகத்தின் ஏட்டிலே தவறியவள்தானே! என்ற இந்த எண்ணப் போருக்கிடையே சென்று வருகிறேன் அண்ணா என்று வெளியே சென்று விட்டாள்,

*

இந்நேரம் வெளியே செல்கிறாளே எங்கு செல்கிறாள் யார் என்று கூட சரியாக விசாரிக்காமல் விட்டுவிட்டோமே ஐயோ தவறியவர்கள் சிலவேளை தற்கொலை செய்து கொள்வார்களே. அது பாபமாச்சே என்று என் மனித உள்ளம் கேட்டது. அதோடு தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தவள் மழைக் கஞ்சி ஒதுங்குவானேன் என்று அதே உள்ளம் பதிலும் கொடுத்தது. வாழ்க்கை இன்னும் கசக்கவில்லை. உலக பந்தம் அவளை விடவில்லை, உன்னால் காப்பாற்ற முடியும் போ உன்னால் ஓர் உயிர் வாழ்ந்தது—வாழ வைத்தாய் என்று உன் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் சிறப்பு! இடம் பெறட்டும் ஓடு ஓடு என்று என்னை தாயுள்ளம் தூண்டிற்று கதவை சாத்திவிட்டு ஓடினேன் தேடு வதற்காக,

நடு இரவு நல்ல இருட்டு ஓட்டமும் நடையுமாக சென்றேன். அந்த தெருவையும் கடந்து விட்டேன். அவளைக் காணவில்லை! ஐயோ அவள் என்ன ஆனாளோ? எங்கு சென்றாளோ? மீண்டும் ஓடினேன், தெருவிளக்கருகே ஒரு உருவம் ஆம் அவளே தான்! நடந்து கொண்டிருந்தாள். அவளருகில் ஓடினேன். ஓசை கேட்டு திரும்பினாள்.

யார்! என்று தமிழ்ப் பெண் போல அதட்டி கேட்டாள். சொல்லாமல் வந்து விட்டாயே! இப்போது இந்நேரம் எங்கு செல்கிறாய் வா என்றேன்.

......ஆம் அவள் ஏதோ எண்ணினாள்.

நான் உனக்கு அண்ணாதான் வா என்றேன்.

நடந்தாள். நான் அவள் பின்னால் வந்து கொண்டிருந்தேன்.

*

ஒற்றை மாட்டு சம்சாரி கருப்பன். அவன் இயற்பெயர் இதுவல்ல! கருப்பசாமி! சாமி என்றாலே உயர்வு என்று பொருள் கொண்டோர் அவனை கருப்பா டேய் கருப்பா என்று அழைத்தனர். அன்னாரின் ஒரே செல்வி பார்வதி! பாஞ்சாலத்தின் அழகரசிகள் தேர்வு நடந்தால் அதில் பார்வதி தான் அழகரசி! இதைத்தான் தேர்ந்தெடுத்தான் இராசன்! அவன் பாவையரை மயக்கவென்று எண்ணியே பட்டாடை அணியும் பேயன்; அவன் பெயருக்கு முன்னும் பி. ஏ: வந்து சேர்ந்தான் பண்ணையார் வீட்டு விருந்திற்கு. கல்லூரியிலே கண்ணிலே மையும்; கன்னத்திலே 'பௌடரும்' அணிந்த பலரைக்கண்ட அவன் படித்த உள்ளம் எழுத வாசிக்க தெரிந்த பார்வதியையும் எண்ணிற்று படித்த பாடத்தை காட்ட ஆரம்பித்தான், காதலென்று உளறினான்! கல்லூரி கன்னியரே மயக்கமுறும்போது; பாவம் பார்வதிக்கு, அவன் ஓர் நீசகுச்சி என்று எப்படித் தெரியும்.

அந்த வீரன் இன்று வருவார் நாளை வருவார் என்று எண்ணியெண்ணி சாகும் ஏழையானாள்! சென்று வருகிறேன் என்று சொல்லிச் சென்ற செல்வனை காணவேயில்லை! வீட்டாரும் வெளியோரும் சாடைமாடையாக பேச ஆரம்பித்தனர். அவர்கள் பேச்சிற்கு ஊக்கம் அளிப்பதுபோல பார்வதி வயிற்றில் குழந்தை யொன்று வளர ஆரம்பித்தது. வீட்டை விட்டு புறப்பட்டு அவள் இங்கு வந்து சேர்ந்தாள்,

இது அவள் கொடுத்த விபரம்.

*

பாலம் பாண்டியனுக்கு அவனுண்டு அவன் கடையுண்டு. நல்ல பையன்: இப்படி எத்தனையோ முறை என்னைப் பற்றி பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்போதோ அவர்கள் என்னைக் கண்டாலும் காணாதவர் போல சென்று இப்படி யிருப்பானு யாருகண்டா. யாரோ ஒரு வேசியை வீட்டிற்கே கூட்டிகிட்டு வந்துட்டானே! என்று சொல்லிப் பேச ஆரம்பித்தார்கள். எனக்குத் தெரியும் விளக்க மறியாதார் எப்போதுமே இப்படித்தான் சொல்வார்கள் என்று. சரி நாமே நேரில் சொல்லியாவது பார்ப்போம் என்று சொல்லிப் பார்த்தேன். அவை அம்மச்சனுக்கனுப்பிய அறைகூவலாயிற்று!

சரி பேசுவோர் பேசட்டும் என்று பேசாமலிருந்தேன். பாவம் பார்வதிக்கும் இவை எட்டியிருக்கும். புண்பட்ட உள்ளத்தை மீண்டும் புண்ணாக்கி யிருக்கும்! நெஞ்சு பொறுக்காது. கண்ணீரை தண்ணீரென விட்டிருப்பாள். எட்டு மாத கர்ப்பிணி, கணவனின் கனி மொழியால் தேறி பிள்ளைக் கனியமுது பெறும் நன்னாள் என்னாள் என்று எண்ணி மகிழ வேண்டியவள்—வாட்டமுற்றாள்! அந்த வாட்டத்தினிடையே இராசன் வந்திருப்பான்,கண்டிருப்பாள். புண்பட்ட இதயம் புகையும் எரிமலையாகி யிருக்கும். அப்போது நானும் வீட்டிற்கு வருவேன். 'பார்வதி' என்பேன், 'என்னண்ணா!' இப்படி பதில் கொடுப்பாள், அப்போதாவது என் அண்டை வீட்டார் அண்ணாவென்றழைக்கும் அவன் மனைவியாளாக யிருப்பாளா? என்றாவது எண்ணிப் பார்த்தார்களா!...

*

அண்ணே 'ஒரு கட்டு பீடி; காலணா வெற்றிலை; ஒரு பாக்கட்டு சிசர்' இந்த குரல்கள்தான், நான் வழக்கமாக கேட்கும் குரல்கள்! சிலவேளை சிசர் கேட்கும் சீமானருகே 'ஐயா', சாமி,...காலணா' இந்த குரலும் கேட்கும்! இவை எனக்கு பழக்கமானவை. இக்குரல்களெல்லாம் என்னைவிட்டு சற்று அகன்று விட்டன. அப்போதுதான் அவன் வந்தான். அவன் எங்கள் பக்கத்துவீட்டு பையன் 'ஐயா உங்க பெண்சாதிக்கு குழந்தை பிறந்திருக்கு' என்றான்...என் இதயத்திலே ஈட்டியால் குத்தினான். என்ன கூறுகிறோம் என்று தெரியாமல் தங்கையை தாரமாக்கி கூறிவிட்டான். ஆம், ஆம்! அது அவன் செய்த குற்றமல்ல; அவன் பெற்றோர்—பெரியோர் குருட்டுக் கண்ணால் கண்டு கூறியதை அவர்களின் வழித்தோன்றல் கூறுகிறது. என்று மெள்ள ஆறுதலடைந்தேன். 'நீங்க வரலையா' என்று கேட்டு அவன் சென்று விட்டான்.

நானும் கடையை பூட்டிவிட்டு வீடு நோக்கி நடந்தேன். வீட்டுக்கும் கடைக்கும் ஒரு மைல்கூட யிராது. இதயத்திலே இரத்தம் கசிய நடந்து கொண்டிருக்கிறேன். எண்ணங்கள் இதயத்தை எரிமலையாக்கிற்று. திருடனை விட்டு விட்டு திருடாதவனை திருடன் என்று கூறும் 'சட்டம்' அவனை தண்டிக்கக் கூறும் வழக்கறிஞனின் 'வாய் வீரம்' இவற்றையெல்லாம் அந்த குற்றமற்றவன் எண்ண ஆரம்பித்தால் இதயம் எரிமலையாகத்தானே செய்யும்.

வீட்டை யடைந்தேன். கதவு மெதுவாக அடைக்கப்பட்டிருந்தது. திறந்தேன். அண்டை வீட்டுப் பாட்டி பார்வதி அருகில் இருந்தாள். நல்ல வேளை பாவி வீட்டுக்கு சமயத்தில் அந்த பாட்டி வந்தாளே என்ற மகிழ்ச்சியும் எங்கோயிருந்து என்னிடம் வந்தது.

பார்வதி படுத்திருந்தாள். என் வரவறிந்து கண் திறந்தாள். ஆம் அவள் உள்ளத்திலும் மகவை பெற்றோம் என்று மகிழ்ச்சி யிருந்திருக்கும். அதையும் ஏதோ எண்ணம் சுக்கல் சுக்கலாக்கி யிருக்கும்.

*

நாட்கள் வாரங்களாக, — வாரங்கள் திங்கள்களாக ஓடி இரண்டு வருடங்கள் ஆயிற்று. வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தேன். கதவு எப்போதும் போல சாத்தி யிருந்தது. பார்வதி என்றேன். பதில் இல்லை! சிலவேளை குழந்தையின் தொந்தரவால் அயர்ந்து தூங்குவாள் என எண்ணி கதவை தள்ளி உள்ளே சென்றேன். பார்வதியைக் காணோம், ஒருவேளை பக்கத்து வீட்டில் பேசிக் கொண்டிருப்பாளோ! இல்லை அந்த பழக்கமே அவளிடமில்லை என்று புரியாதிருக்கும்போது விளக்கடியில் ஒரு தாள் மடித்து வைத்திருந்தது.

அண்ணா!

வரும்போதே பார்வதி என்று அன்பொழுக அழைத்து வருவீர்கள். என் குரல் கேட்காது திகைத்து நிறந்திருப்பீர்கள். அண்ணா நீங்கள் எதிர்பார்த்திருக்கவே மாட்டீர்கள், அண்ணாவென்று அண்டிவந்து இரண்டாண்டுகள் யிருந்து இடையே சொல்லாமல் சென்று விட்டாளே என எண்ணுவீர்கள்.

அண்ணா! என்னை யாரென்று உங்களுக்கும் உங்களை யாரென்று எனக்கும் தெரியாது. மழைக்காசக ஒதுங்கி நின்ற என்னைக் கண்டு பேசி கர்ப்பிணி என்று கருணை காட்டி, இருக்க இடமளித்து உணவளித்த உங்களிடம் சொல்லாமல் குழந்தையுடன் சென்றமைக்கு உண்மையில் வருந்துகிறேன், மன்னிக்க என்று வேண்டுகின்றேன்,

ஊராரின் உளுத்துப்போன கண்களுக்கு நாம் இருவரும் துணைவன் துணைவி இவ்வாறு நம்மை காணும் போதும் பேசும்போதும் என் உள்ளம் உணர்ச்சியற்று போகிறது. உயிரற்ற நிலையில்தான் சில வேளையில் உலவ நேரிடுகிறது!

தாங்களோ எதையும் தாங்கும் இதயத்தால் அவற்றை தாங்கித் தாங்கி இதயம் கனத்துபோய் ஊரில் உலவுகின்றீர்கள். இந்தநிலை தங்களுக்கு நான் கொடுத்ததல்லவா! உங்களை—என் அண்ணாவை கீழ்த்தரமாக பேசுமளவிற்கு நிலைமை உண்டாக்கியவள் நானல்லவா!

அண்ணா! உண்மை தியாகிகளை—உத்தமர்களை இந்த குருட்டுக் கண்ணர்கள் என்றும் மதித்ததில்லை. ஊருக்கு தெரியுமா நான் வந்த கதை! இதே தெரியாத அந்த இதயமற்ற கூட்டத்திற்கு உங்கள் தியாகம் எப்படி அண்ணா தெரியப் போகிறது!

அண்ணன் தங்கை என்றால் உடன் பிறப்பாகத்தான் இருக்க வேண்டுமா; நம் அன்பு புனிதமானது. ஆனால் உண்மை அறியா ஊராருக்கு......கணவன் மனைவி காட்சி...இதை எண்ணினால் இதயம் சோர்வடைகிறதண்ணா சோர்வடைகிறது.

அவர்கள் காணும் கற்பனை காட்சி தியாக திருவுருவை என்னருமையண்ணாவை அழிக்கும் கோரக் காட்சியாக மாறக் கூடாது என்று எண்ணினேன் சென்று விட்டேன்,

சென்றுவிட்டேன் என்றதும் வருந்துவீர்கள். நானும் வருந்துகிறேன்; அருமை அண்ணாவிற்கு உணவு சமைத்துக் கொடுக்கும் அரும் பதவியைவிட்டு செல்கிறேன் என்று நானும் வருந்துகிறேன்.

அண்ணா அன்பு தங்கை தங்களை அல்லல்படுத்தியது போதாதென்று இன்னும் ஒன்று கேட்கிறேன், செய்வீர்களா அண்ணா; மறுக்க மாட்டீர்களே ...அண்ணா, மாமாவென்று அன்பொழுக அழைப்பாளே மலர்க்கண்ணி அவளுக்காகவாவது ஒன்று செய்யுங்கள், மணம் புரிந்து மலர்க்கண்ணிக்கோர் மாப்பிள்ளையை கொடுங்கள அண்ணா. உண்மை அறியா ஊத்தர்கள் முன் திருமணத் திருவிழா நடத்திக் காட்டுவோம்...வணக்கம்,

அன்புள்ள தங்கை

கரு. பார்வதி

திராவிடன்

சந்தா விவரம்

ஆண்டு சந்தா ...	ரூ.	8	0	0
ஆறுமாதம் ...	ரூ.	4	0	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ.	9	0	0
ஆறு மாதம் ...	ரூ.	4	8	0
தனிப்பிரதி ...	ரூ	0	3	0
,, வெளிநாடு ,,		0	3	6

நம் தாயகத்தை மீட்க நாம் பணியாற்றினால் அது தேசத் துரோகமாம்!

முதல் பக்கத்—தொடர்ச்சி

எத்தனையோ கோவில்கள், திருக்குளங்கள், திருவிழாக்கள், வேத பாராயணங்கள், வேட்டுச் சத்தங்கள், காலட்சேபங்கள் இவற்றினுடையவும், அரசாங்கத்தின் அடக்குமுறைகள், எதிர்க்கட்சியினரின் ஏசல்கள் ஆகிய அத்தனை எதிர்ப்புகளையும் தாங்கிக் கொண்டு தானே வளர்ந்திருக்கிறோம்! எப்படிப் பெற முடிந்தது எங்களால்—சாதாரணமான எங்களால் இந்த வளர்ச்சியை! எங்களுக்கென்ன, காங்கிரஸ் கட்சியின் ஆதரவும், பின்னணி பலமும் உண்டா! நாங்கள் என்ன ஞானிகளா? அல்லது பெரிய பணக்காரர்கள் நிலப்பிரபுக்கள் என்ற பரம்பரைப் பெருமை படைத்தவர்களா! ஏதும் இல்லையே! பின், எப்படிப் பெற்றோம் இந்த வளர்ச்சியை! எங்களது சொந்த சாமர்த்தியத்தாலா! சொந்த சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கலாம்; ஆனால் அதுமட்டுமா இந்த வளர்ச்சிக்குக் காரணம்!

இன்று நாங்கள் பெற்றுள்ள வளர்ச்சிக்கு, நாங்கள் கொண்டுள்ள இலட்சியத்திலே உள்ள ஜீவசக்தி, நியாயம் இவைதானே காரணமாயிருக்க முடியும்? நாங்கள் காட்டுகிற காரணங்களை மக்கள் நியாயமானவை என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே அதன் பொருள். அதனால்தான், நியாயம் மிகுந்த 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சியம் குறித்து கர்னாடக மக்கள் சிந்திக்க வேண்டுமென அவர்களை அன்புடன் அழைக்கிறோம்.

"வடநாடு தென்னாடு என்று பேசுவதை இனி பொறுக்க முடியாது. இந்தியாவை மேலும் துண்டாடச் செய்யும் முயற்சிகளைச் சகிக்கமாட்டோம். அது நாட்டின் ஒற்றுமையைப் பெரிதும் பாதிக்கும். அனைத்திந்தியாவும் ஒன்றுபட்டே யிருக்கவேண்டும்" என்று பேசுவதெல்லாம் நிலைத்து நிற்கக் கூடியதல்ல. அந்த வாதம் உருப்படாத ஒன்றாகும். வடநாட்டைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டாலும் அங்கு இந்து—முஸ்லீம் ஒற்றுமையை நிலைபெறச் செய்ய முடிந்ததா?"

ஷேரே காஷ்மீர் என்று சிறப்புப் பெயரால் ஷேக் அப்துல்லாவை காங்கிரஸ்காரர்கள் போற்றினர்; நேருவைப் பார்த்தால் ஷேக் அப்துல்லாவைப் பார்த்தது போலவும் அல்லது ஷேக் அப்துல்லாவைச் சந்தித்து விட்டால் நேரு பண்டிதரைச் சந்தித்ததுபோலவும் தேசியத் தோழர்கள் பெருமையுடன் கூறிவந்தனர். இன்று அந்த ஷேரே காஷ்மீர்—காஷ்மீரச் சிங்கம் எங்கே என்று கேட்கிறேன். அன்று நேரு பண்டிதரின் பிரதிபிம்பம் ஷேக் அப்துல்லா—இன்று அவர் சிறையில்! அந்த சிங்கத்துக்குப் பதிலாக இன்று குலாம்பக்ஷி, ஷேரே காஷ்மீராகக் காட்சி யளிக்கிறார்!

இந்நிலை ஏன் ஏற்பட்டது? ஷேக் அப்துல்லா செய்த குற்றம்தான் என்ன? இன்னும் வழக்கு உருவாக வில்லையாம்! இதுவிவரம் எப்படியோ இருக்கட்டும்; தனது தாய் நாட்டைப்பற்றி அக்கரை கொள்ளும் எவரும் ஆதிக்கக்காரர்களுக்கு விரோதிகளாக—துரோகிகளாகத்தான் இருக்கமுடியும்! இதுதான் ஏகாதிபத்தியத்தின் பரம்பரைக் குணமாக யிருந்து வருகிறது; இதனை வரவாறும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நேரு பண்டிதர் அபுல்கலாம் ஆசாதிடம் மிகுந்த பரிவு காட்டலாம், அது போலவே ஆசாதும் நேரு பண்டிதரிடம் பாசம் காட்டலாம். இவ்வளவும் எந்த அளவுக்கு! எத்தனை காலத்துக்கு என்பதையும் தேசியத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வட நாட்டில் என்னதான் ஒற்றுமைக் கீதம் பாடினாலும் ஒற்றுமையை நிலைக்கவைக்க முடியாது.

இந்தியாவிலேயே கடைசி சமரசத் தூதர் பண்டிதநேருவாகத்தான் இருக்க முடியும். அவருக்குப் பின் இந்தியத் துணைக்கண்டம் இந்துமத வெறியர்களின் கையில் சிக்கிச்சீரழியப் போகிறது.

நானும் பெரியார் ராமசாமி அவர்களும் வடநாட்டிற்கு ஒருமுறை சென்றிருந்தோம்; லாகூரில் உள்ள ஜும்மா மசூதியை பார்க்கச் சென்றிருந்தோம். தாஜ்மஹாலுக்கு அடுத்தபடியாக அழகு மிகுந்தது என்று கருதப்படுவது ஜும்மா மசூதி. எங்களுக்கு அதனைக் காட்டி வருவதற்காக காலஞ்சென்ற பேரறிஞர் எம். என். ராய், எம். ஏ. பட்டதாரிகளான இரு இளைஞர்களை எங்களுடன் அனுப்பி வைத்திருந்தார். ஒருவர் முஸ்லீம் இன்னொருவர் இந்து! ஆனாலும் இருவரும் எம். ஏ. படித்த பட்டதாரிகள். அந்த மசூதி உத்திரத்தில் 5, 6, துவாரங்கள் இருந்தன. இந்த துவாரங்கள் ஏன் என்று ஒருவரைக் கேட்டேன். அவர் என்னை தனியாக அழைத்துச் சென்று இந்தத் துவாரங்கள் இருக்குமிடத்தில் மசூதியைக் கட்டிய முகலாயர்கள் நவரத்தினக் கற்களை பதிப்பித்திருந்தனர். பின்னர் வந்த இந்து மன்னர்கள் அவற்றை எடுத்துக் கொண்டுவிட்டனர். என்று கூறினார்—

ஏகாதிபத்தியங்களின் பரம்பரைக் குணத்தை நாமறிவோம்!

அவர் முகம்மதியர். மற்ற இரண்டாவது இளைஞரைக் கேட்டேன்—ஏன் இந்தத் துவாரங்கள் என்று. அவர் கூறினார்—முகம்மதிய மன்னர் கட்டிய இந்த மசூதியை பாதுஷாக்களால் கட்டிக் காக்க முடியவில்லை. அதுதான் பாழடைந்துவிட்டது. — என்று! அவர் இந்து. இந்த சில துவாரங்கள் இந்த இரு இளைஞர்களுக்கும் வெவ்வேறு காரணங்களை கூறுகின்றன — இதுதான் வடநாடு!

பிரமபுத்திரா நதியைக் கடந்து, கௌஹாத்தி செல்வதற்காக நாங்கள் நீராவிப் படகொன்றில் போய்க்கொண்டிருந்தோம். அப்போது தேநீர் அருந்த ஒரு கடைக்குச் சென்றேன்—படகிற்குள்ளேயே; அப்போது அந்தத் தேநீர் கடைக்காரர், எதிர்க்கடைக் காரரிடம் செல்லுமாறு கூறினார். நான் திகைத்துப்போய் 'ஏன்' என்று கேட்டேன். அதற்கு அவர், 'நீங்கள் இந்து. நான் முஸ்லீம்; நான் உங்களுக்கு தேநீர் தந்தால் நீங்கள் போனபிறகு, எதிர்த்தாற்போல் உள்ள இந்து தேநீர் கடைக்காரர் என்னுடன் சண்டைக்கு வருவார்' என்று கூறினார்; இதுதான் வடநாட்டின் நிலை!

இந்த நிலையில் உள்ள வடநாடுதான் நேரு பண்டிதரிடம் உள்ளது. எத்தனை காலத்திற்கு நேரு, சமரசத் தூதுவராகவே இருக்க முடியும். இந்நிலையில் தென்னாட்டில் உள்ள முஸ்லிம்களில் பலர் காங்கிரசுடன் சேர்ந்து வாழ்வதே நல்லது என்று கூட நினைக்கிறார்கள். அவர்கள் கூட ஷேக் அப்துல்லாவை விடவா நாம் காங்கிரசுடன் சேர்ந்து வாழமுடியும்! என்று எண்ணிப் பார்த்தால் வடநாடு ஏகாதிபத்திய உணர்ச்சி கொண்டது என்ற உண்மை புலப்படும்.

இங்குள்ள முகம்மதியர்களும் கிறிஸ்துவர்களும் அரேபியாவிலிருந்தோ ஜெருசலத்திலிருந்தோ ஓடிவந்தார்களா அல்லது இறக்குமதி செய்யப்பட்டார்களா என்றால் இல்லையே! இந்த நாட்டில் நிலவிய இழிவைத் தாளமாட்டாமல் மதம் மாறியவர்கள்தானே அவர்கள் எல்லாம். எனவே அவர்களும் திராவிடர்களே என்ற இன உணர்வு கொள்ள வேண்டும். வடநாட்டவரின் ஏகாதியத்தியப் போக்கினை புரிந்துகொள்ள வேண்டும்.

மதவெறி கொண்டலையும் வடநாட்டவர்களுடன், முற்போக்கு எண்ணமும் பண்பும் கொண்ட நாம்—தென்னாட்டவர்கள்—திராவிடர்கள் ஒன்றி எப்படி வாழ முடியும்!

தென்னாட்டு வளங்களை வடநாடு எப்படி எல்லாம் கொள்ளையிடுகிறது; தென்னாட்டு மக்கள் வடவருக்கு எப்படி அடிமையாக்கப்படுகிறார்கள் என்பதை இங்கு பேசிய கழகத் தோழர்கள் விளக்கிக் கூறினார்கள். அந்தக் காரணங்களில் எதைத் தவறெனக் கூற முடியும்.

எனவே தி மு. கழகத்தின் இலட்சியமான 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை கன்னட மக்கள் வெகுவாக எண்ணிப் பார்த்து, அதற்கு நல்ல ஆதரவை நல்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பூகோளப் படத்தில் புதியதோர் நாட்டின் பெயரினைப் பொறித்த மாவீரன் ஜின்னா ஒரு முறை சென்னையில் விருந்தொன்றிற்கு வந்திருந்தார்; அவ் விருந்தில் சர். முத்தையா செட்டியார், முத்தையா முதலியார், சாமியப்ப முதலியார் போன்றவர் உள்ளிட இருந்தோம்—அப்போது ஜின்னா அவர்கள். பெரியாரிடம் இவ்வளவு பேர் இருந்தும் நாட்டுப் பிரிவினைக்கு கஷ்டப்படுகிறீர்களே என்று கேட்டார். அதற்கு பெரியார் அவர்கள் கூறினார்கள்—'உங்கள் முஸ்லீம் இனத்தைப் போல் அல்ல, இங்குள்ளவர்கள்; இங்கே கூடி யிருக்கிற 23 பேர்களும், 23 வேறு வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள்! முஸ்லீம்கள் கராச்சியிலிருந்து, 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்றால், தென் கோடியிலிருக்கும் முஸ்லிமும் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று கூறுவார்கள்; அந்த இன ஒற்றுமை இங்குள்ளோரிடம் இல்லை; எனவேதான், திராவிட நாடு இன்னும் அமையாமலிருக்கிறது' —என்று!

இந்த நாட்டு மக்களிடையே—திராவிடர்களிடையே இன ஒற்றுமையை உருவாக்குவதில்தான் கடந்த 25 ஆண்டு காலமாக சுயமரியாதை இயக்கம் பணிபுரிந்து வந்திருக்கிறது; அந்த ஒற்றுமையில்தான்—சாதி பேதமற்ற அடிப்படையில்தான் நாம் சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்று முயற்சித்து வருகிறோம். இப்போதுள்ள இளைஞர் சமுதாயம், நாளை, வளர்ந்து பெரியவர்களாகும்போதுதான் நமது பணியின் பெருமையை அறிவர்.

நாம் இப்போது செய்துவரும் சமுதாயப் பணி, உழவு வேலை செய்வதைப் போன்றது. உழவு வேலை செய்யும்போது பலன் தெரியாது. உழுது, விதைத்து. களை எடுத்து, நீர்ப்பாய்ச்சி காவல் காத்து வந்தால், நிச்சயம் பச்சைப் பயிர் வளரும்—பலன் தரும்; அதைப்போன்றே இப்போது நாம் செய்யும் பணி மேலும் வளர்ந்து எதிர்காலத்தில் நிச்சயம் பலன் தரும்: நாம் இந்த உழவு வேலையை. மட்டும் பதம் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் கேட்கிறார்கள்—ஏன் உங்களுக்கு இந்தச் சிரமம்? காங்கிரசை ஏன் எதிர்க்க வேண்டும்?—என்று! ஆம்: நாம் காங்கிரசை எதிர்க்கிறோம் — காரணமின்றி அல்ல! காங்கிரஸ் என்றால், இன்று அது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிற ஒரு பெரிய கட்சிதான்.

காங்கிரசுடன் நாங்கள் சேர வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் கரையாளர் பேசியிருந்தார்—'காங்கிரசில் வயது முதிர்ந்தோர்களே இருக்கிறார்கள். தி. மு. கழகத்தில் ஏராளமான வாலிபர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் காங்கிரசில்சேர்ந்து பணி புரிய வேண்டும். பெரியாருக்கும் அண்ணாதுரைக்கும் காங்கிரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன—என்று பேசியிருந்தார்.

காங்கிரசில் இருந்தால் பதவிகள், பட்டங்கள் கிடைக்கும்—மந்திரிகளாகி யிருக்கலாம் என்பது தெரிந்தும், இலாபம் தருகிற காங்கிரசை விட்டுவிட்டு எதிர்த்து நிற்கிறோமே—ஏன்? எங்களுக்கென்ன பைத்தியமா?

இதனால்தான் பண்டித நேரு கூட 'பைத்தியக்காரர்கள்' என்று எங்களைக் கூறினார் போலும்!

பட்டம் பதவிகளை வெறுத்து காங்கிரசை எதிர்த்து தனியாக நின்று தனிப்பாதையில் நடந்து போகும் எங்களைப் பைத்தியக்காரர்கள் என்று அழைக்கிறார்கள். ஒரு வகையில் நாங்கள் பைத்தியக்காரர்கள்தான்.

பைபிளும் மதவாதிகளும் அதுவரை 'உலகம் தட்டை' என்று ஓதி வந்தனர். ஆனால் 'உலகம் உருண்டை' என்று கலிலியோ கூறினான். அன்று அவனை பைத்தியம் என்றுதான் கூறினார்கள். என்றாலும் அவன் எதிர்ப்புகளைத் தாங்கிக் கொண்டு 'உலகம் உருண்டைதான் என்ற உண்மையை நிலைநாட்டினான்.

அதேபோல சில நியாயங்களைப் பெற உரிமைகளை நிலைநாட்ட, விடுதலையுடன் வாழ நாம் போரிடும்போது, நம்மை 'பைத்தியக்காரர்கள்' என்று கூறுகிறார்கள். என்ன செய்வது? உலகிற்கு அவ்வப்போது கலிலியோவைப் போன்ற சில பைத்தியக்காரர்கள் தேவைப்படுவது போல இந்த நாட்டிற்கும் நம்மைப் போன்ற பைத்தியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள்.

நம்மை ஏசிப் பேசுபவர்களும் சரி, எதிர்ப்பதாகக் கூறுபவர்களும் சரி—நாம் சொல்வதைக் கேட்காத வரையில்தான் நம்மீது ஆத்திரப்படுகிறார்கள்; அவர்கள் தி. மு. கழகம் எப்படி இவ்வளவு

14-ம் பக்கம்

வேதனை வேலிக்குள்ளே யிருக்கும் அமுதவல்லி...நர்மதாவுக்கு எழுதிய கடிதத்தின் முற்பகுதி சென்ற இதழிலே வந்தது. இப்போது கடிதத்தின் பிற்பகுதி இதோ உங்களின் பார்வைக்கு...!

24

ஆண்டவன் தாண்டவமாடிய தில்லையிலேதான் எங்களது புது வாழ்வு துவங்கியது. தேவ வீதியை ஒட்டியே எங்களுக்கு வீடும் அமைந்தது. சின்னஞ்சிறு ஓட்டு வீடுதான் என்றாலும் பெரிய மாளிகையிலே வசிக்கும் பூரிப்பை விட ஆயிரம் மடங்கு மகிழ்ச்சி யிருந்தது எனக்கு. நான் பிறந்து வளர்ந்த 'பகவான் பவன்'த்திலிருந்த மலர்ச் சோலையோ, நெஞ்சிலே குளுமையைப் பாய்ச்சிய பூக்கூட்டமோ இல்லவே இல்லைதான். இதோ என் எதிரிலிருக்கும் சின்னஞ்சிறு பூக்கடையிலிருந்து பூத்த மலர் செத்துச் சவமாகக் குவிந்துதான் கிடக்கிறது. தங்க ஒரு தங்க ஓடுடைய வீடு கண்ட தடாபரரின் பொன்மேனியிலே அணிசெய்யப் போகும் பூரிப்பு அந்தச் சாவுச் சிரிப்புச் சிரிக்கும் பூக்கூட்டத்துக்கு. மலர், மாலையாகி மகேசன் கழுத்துக்குப் போகிறது இங்கே. வைரமாலைக்கும், நவரத்ன ஹாரத்துக்கும் நெஞ்சிலே முதலிடந்தந்து முறுவல் பூக்கும் அந்த நடனராஜன், [illegible] போகாத பூமாலைக்கா மதிப்புத் தரப்போகிறான்! ஏழையின் அன்புப் பரிசு பூமாலை. எதை நம்பியோ ஏமாந்த அந்த வரண்ட தலையும் வாடிய வயிறுமுடையோன் இதைத் தானே செய்ய முடியும். வழுக்கைத் தலையும் கொழுத்த உடலுமுள்ள நகரும் மலையின் மடியைச் சுற்றித்தான் பொன்னார் மேனியின் பார்வை சுழன்று கொண்டிருந்தது. அவர்கள்தானே ஆண்டவனை அடிக்கடி 'கவன்'த்துக் கொண்டிருந்தார்கள். தங்கஜோடு வைரத்தோடு என்ன? பொன்முடி என்ன?...இவைகளையெல்லாம் சாதாரண பூமாலையைத் தூக்கிக்கொண்டு வந்தவனால் தரமுடியுமா? எனவே பகவானின் கிருபை 'பெரிய' பக்தர்களுக்குக் கிடைத்தது. அது சிதம்பர ரகசியம்! எப்படியாவது தொலைந்து போகட்டும்!

நானும்—அவரும் வாழ்க்கைப் படகில் ஏறி அமர்ந்தோம். எதிர்பார்க்காத புயல் எங்கெங்கோ உருவாகியது. இவ்வளவு சீக்கிரத்திலே அது நெருங்கி வருமென்று நான் நினைக்கவேயில்லை. அத்தான் என்று அன்பாக அழைக்கும்போதெல்லாம் அமுதா என்று நெஞ்சகுளிரக் கிளப்பிய குரலிலே நாள் வளர வளர ஒரு அலட்சியம் கப்பிக் கொண்டே வந்தது. தேனாக யிருந்தாலும் அதிலே மருந்தைக் கலந்து சாப்பிடுகிறபோது ஒருவகை வெறுப்புத் தென்படுகிறதே அதைப் போல மோடியோடு நடக்கத் துவங்கினார். அவரை நம்பிக் கொண்டிருக்கிறேன் நான். அவரோ வேறு யாரையோ நம்புகிறார். அந்த நம்பிக்கை இதயத்தை என்மீது திருப்ப எவ்வளவோ பாடுபட்டேன். அதன் விளைவுதான் அவர் பற்றிய ரகசியமும் தெரிய வந்தது.

எங்கள் வீட்டுக்கு நாலைந்து வீடு தள்ளி தில்லை தீட்சதரின் வீடு இருந்தது. ஆண்டவனுக்கு தொண்டு செய்தார் தீட்சதர். அவரைப் பின்பற்றி ஆண்டவனையும் அடியார்களையும் மகிழ்விக்க முன் வந்தாள் கோகிலம். கோகிலம் சுவாமி மலைக்காரி. தீட்சதருக்கு நெருங்கிய உறவினள். ஆட்டக் கலையிலே நல்ல பயிற்சி அவளுக்கு. பயின்று தேர்ந்ததை பாருக்குக்காட்ட தில்லைக்கு வந்தாள் ஒரு சமயம். ஆடாத ஆண்டவன் முன்பு அரங்கேறி ஆடிக் காட்டினாள் கோகிலம். அந்த மயிலாட்டத்திலே மயங்கிய பூமானும் சீமானும் கோகிலத்தின் ஆட்டத்தைக் கோயிலுக்குள்ளேயே சிறை போட்டுவிடத் தீர்மானித்தனர். அவர்கள் தீர்மானம் போட்டுவிட்டால் நடக்காததுமிருக்கிறதா?

அந்த தீட்சதரின் வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிக் கொண்டு அடிக்கடி ஆடிமகிழ்வித்தாள். தீட்சதருக்கு 'கிராக்கி' ஏற்பட்டது. 'தர்ம காரியம்' வளரத் துவங்கியது. ஊர் பிரமுகர் வைரநாதரின் கருணை கோகிலத்துக்கு ஏராளமாக யிருந்தது. வைரம் கோகிலத்தைப் பார்த்துச் சிரித்தது. கோகிலமோ 'எல்லோரையும்' பார்த்துச் சிரித்தது. முதல் போடாத வியாபாரம் தீட்சதருக்கு. வைரநாதரின் சின்னஞ்சிறு 'மோரிஸ்' வாசலில்வந்து சத்தம் போடாமல் நிற்கும்போதே குறிபார்த்துக் கொள்வார் தீட்சதர்—அவர்தான் தில்லைவாழ் அந்தணராயிற்றே—ஓடோடி வந்து வரவேற்பார். அவர் பேச்சு முன் அறையோடு சரி...பின் அறையிலேதான் கோகிலம் காத்துக் கொண்டிருப்பாளே. 'தெய்வமே' உருப்பெற்று வந்ததுபோல எண்ணி அவரை வருந்தி வருந்தி வரவேற்பாள், பரந்த மார்பிலே பன்னீர் தெளித்து, சரிந்த மேனியெல்லாம் சந்தனம் பூசி வைரநாதரைப் பொன்னார் மேனியராக்கிப் பூரிப்பாள் கோகிலம். நானென்ன மட்டமா'வென்று 'திருப்புகழ்' பாடுவார் நாதர். நாதனும்—அம்பாளுமிருக்கும் மூலஸ்தானத்தைப் பூட்டிக் கொண்டு அய்யர் அறைக்குவெளியே காவலிருப்பார். 'பாரா' அதிகாலையிலே முடியும், கனைத்துக் கொண்டே நாதர் வெளியேறுவார். தேய்ந்த நாணயம் போலயிருக்கும் பல்லைக்காட்டிக் கொண்டே விடை தருவாள் கோகிலா. தீட்சதர் குனிந்து நெளிந்து கொண்டு தொடருவார். பயந்து பதுங்கி பாவனை செய்யும் அனுமாரை—ராமர் கம்பீரமாக பார்ப்பது போல நாதர் அவரைப் பார்த்துக்கொண்டே நடப்பார். கார் பறக்கும். இந்த தேவசேவையில்தான் தேவதாஸும் குறுக்கிட்டார்.

தீட்சதருக்கும் தேவதாஸுக்கும் எப்படியோ பழக்க மேற்பட்டது. அந்த நட்பு வீட்டு வரை வளர்ந்தது. நகை காட்டி, நடை காட்டி அவரை வலைக்குள் இழுத்துப் போட்டுக் கொள்ள வெகு நாட்களாகவில்லை. இதுதான் புன்னகை செய்யும் புலியாயிற்றே. அது ருத்ராட்சப் பூனை. இவர் காதல் தெய்வம் போல நடித்தார். அவளோ 'பத்தினி' யானாள், அந்த வேஷ நாடகத்திற்கு தீட்சதர் அதிகாரம் பெற்ற உரிமைக்காரரானார்.

ஒரு நாள்...அந்தி நேரம். வானம் இருண்டு போய் இடியும் மின்னலும் கோரமாகி பெரு மழை வீசியடித்துக் கொண்டிருந்தது. அன்று இரவு ஆலயத்திலே நடைபெற இருந்த இந்தப் 'பரதநாட்டியம்' நடைபெற முடியாமலே போய்விட்டது. ரசிகர்கள் இடிந்த இருதயத்தோடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். வைரநாதரின் மோரீஸ படையெடுத்தது ஒரு பகுதி, உள்ளே நாதரின் மேல் கோகிலா சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். அதை பார்த்துவிட்டதிலே அரைகுறை ரசிகர்களுக்கு ஒரு திருப்தி. சேறை வாரி வீசிக்கொண்டு கார் கிளப்பியது. வெள்ளை வேட்டிக் காரர்கள் சபித்துக் கொண்டிருந்தார்கள்.

ஓடோடி வந்த கார், தீட்சதரின் வீட்டு ஓரமாயிருந்த லாந்தர் கம்பத்தையும் ஒரு போது மோதி விட்டு ஆடி நின்றது. கோகிலம் நடனமாடிக் கொண்டே நடந்து உள்ளே போனாள். நடனகலா ரசிகர் நாதர் அவளடி தொடர்ந்தார். மழையோ விடுவதாகயில்லை மழை நின்றாலும் நிற்காவிட்டாலும் அதைப்பற்றி அவருக்கேன் கவலை. இரவு முழுவதும் கோகிலத்தின் கோட்டான் குரலையும்; மந்தி நடனத்தையும் ரசித்துச் சுவைக்க தீர்மானித்துவிட்டாரே!

நடு நிசி. பெரு மழை நின்று தூறல் மட்டும் லேசாக வீசியடித்துக் கொண்டிருந்தது. கையிலே டார்ச்சை எடுத்துக்கொண்டு தலையிலே துண்டை இழுத்துப் போட்டுப் போர்த்திக் கொண்டு தீட்சதர் வீட்டு வாசலிலே போய் நின்றார் தேவதாஸ். தட்டித்தட்டி தேவதாஸின் கை ஓயவும் கதவு திறக்கவும் சரியாக இருந்தது. உள்ளே அடியெடுத்து வைத்தார். சைகையால் தடுத்தி நிறுத்தினாள் கோகிலா. தூரத்திலே சோற்றாலடித்த பிண்டம் தீட்சதர் பிரேதம்போல விழுந்து கிடந்தார். இடி போலக் கிளப்பிய குரட்டைச் சப்தம் அவர் உயிரோடுதான் யிருக்கிறாரென்பதைக் காட்டியது. பெரிய விளக்கின் ஒளியை சிறியதாக்கிக் கொண்டே கோகிலா பேசிக் கொண்டிருந்தாள்.

'அவர் இருக்கிறார் உள்ளே!'

'எவரடி அவர்?'

'வைரநாதர்...என் குடும்ப நிர்வாகி!'

'அப்போது நான்'

'நீங்கள்! நீங்களேதான்!'

சிரித்துக் கொண்டே மழுப்பி அனுப்ப முயற்சித்தாள். தேவதாஸோ லேசிலே போவதாக இல்லை. பலாத்காரம் செய்யத் துவங்கினார். சலசலப்பைக் கேட்டு வைரநாதர் எழுந்தருளினார். ஆட்டுக் குட்டியோடு போராடிய ஓநாய் சீறிவந்த கிழப்புலிமீது பாய்ந்தது. பிறகு என்ன? ஒரே 'போர்'தான். வைரநாதர் பலமாகத் தாக்கப்பட்டார். உடலின் பல பாகங்களிலே ரத்தக் காயம். உயிர் இப்போது ஊஞ்சலாடுகிறது. போகிற உயிர் போகாமலேயிருந்துவிட ஆண்டவன் சன்னதியிலே ஆறுகால பூஜை நடத்த வைரநாதரின் 'தர்ம பத்தினி' ஏற்பாடு செய்திருக்கிறாள்.

என் நிலைதான் மிகமிக பயங்கரமாகப் போய்விட்டது. விடிந்ததும் விடியாததுமாக போலீஸ் என் வீட்டை வளையமிட்டது. எங்கெங்கெல்லாமோ போலீஸ் லாரி பறந்தது. முதலிலே எனக்கு விபரம் புரியவே இல்லை. என் தந்தைதான் போலீசில் ரிபோர்ட் கொடுத்திருக்கிறாரோ என்று திகிலடைந்தேன். பின்னர்தான் 'முழுக்கதை'யும் புரிந்தது. ஆனால் தேவதாஸ் இருக்குமிடம் மட்டும் புரியவேயில்லை — போலீஸாருக்கும் கூடத்தான். நீ கூட பத்திரிகையிலே சில நாளைக்கு முன்பு 'சிதம்பரம்' செய்தியைப் பற்றி படித்திருப்பாய். அதிலே 'மோகன்' என்ற வாலிபன் வைரநாதரை தீட்சதர் வீட்டிலே தாக்கியதாக 'கதை' அளந்திருந்ததைக் கண்டிருக்கலாம். மோகன் அதுதான் உன் தம்பியின் சிதம்பரவாசப் பெயர். மோகன் என்ற பெயரிலேதான் அவர் சிதம்பர வாசிகளுக்கு அறிமுகமானார், எவ்வளவு எழுதித்தான் என்ன...... ஒடிக்கப்பட்ட என்வாழ்வு ஒடிக்கப்பட்டது தானே! நிலைமை இனி எப்படி எப்படிப் போகுமோ? செய்திகளை ரகசியமாக வைத்துக் கொள். முடிந்தால் ஒரு முறை இங்குவந்து போ.

"அமுதவல்லி"

●

(அடுத்த வாரம்......?)

ஆமதாபாத்

ஆமதாபாத் மணிநகர் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் 6-2-55 மாலை 4 மணிக்கு அ. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ச. சந்திரன், உதவி செ. ச. ராமலிங்கம். செயற்குழு உறுப்பினர்கள் மு.சாமிதுரை, ர. ரத்தினம் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செய்திகள்

மதுரை மாநாடு : கணக்கு விவரம்

13-2-55 ஞாயிறு காலை 11·மணிக்கு மதுரை மாவட்ட தி. மு கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் மதுரை நகர கழக அலுவலகத்தில் தோழர் தா· ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் மதுரை மாவட்ட தி· மு கழக இரண்டாவது மாநாட்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு கீழே கண்டபடி ஒப்புக் கொள்ளப்பட்டது.

		ரூ.	அ.	பை
வரவு டிக்கட் மூலம்	...	15647	0	0
நன்கொடை மூலம்	...	779	0	0
ஸ்டால் மூலம் வாடகை	...	400	0	0
விளம்பரம் மூலம்	...	100	0	0
வாளி வித்து வரவு	...	20	0	0
ஆக மொத்தம்	...	16946	0	0
செலவு	...	12703	3	6
இருப்பு	...	4242	12	6
தலைமை கழகத்திற்கு அனுப்பியது	...	3000	0	0
டிக்கட் பாக்கி	...	215	0	0
செயலாளர் முத்து வசம்	...	1027	12	6
		4242	12	6

மதுரையில் கழகக் கட்டிடம் வாங்குவதற்காக ஏற்கனவே தலைமை நிலையத்திலிருக்கும் ரு 3000 உடன் எஸ். முத்து வசம் இருக்கும் இருப்பு ரு 1027 12 6 யும் சேர்த்துவிட வேண்டியது என்று தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி ஆத்திமுத்து

தூத்துக்குடி சதி வழக்கில் 10 மாதங்கள் ரிமாண்ட் கைதியாக இருந்து வெளி வந்த டூவிபுரம் தோழர் பி. ஆத்திமுத்து 6-2-55 இரவு 9-45 மணிக்கு வெறிநாய் கடியின் காரணமாய் இயற்கை எய்தினர். 7-2-55 காலை 10 மணிக்கு சவ அடக்கம் நடைபெற்றது. அன்னரின் தொண்டைப்பற்றி தோழர் கே. தாளமுத்து பேசியதுடன் நகர தி. மு· கழக சார்பாக அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

அன்று ஆச்சாரியாரின் அடக்குமுறைக்கு ஆளாகி' அவதி பலபட்டு இன்றுவரையும் தன் கொள்கை காத்த கோமான். கொள்கை குன்று தூத்துக்குடி கண்டெடுத்த புதையல்! இரத்த வெறிபடைத்த ஆச்சாரியார் ஆட்சியின் கோரப்பற்களை உடைத்து தன்னை விடுவித்துக் கொண்ட வீரன்! எதிரிகளின் சதியிலும் தன்னைக் காத்துக் கொண்ட அஞ்சா நெஞ்சன் டூவிபுரத்தை கொள்கைக் கோட்டையாக்கி காத்து வந்த காவலன்! தோழர் ஆத்திமுத்து சிறை வாழ்வினின்று வெளி வந்ததிலிருந்து நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் 29 தினங்களுக்கு முன் நாய் கடித்ததும் உடன் சேர்ந்து அன்னரை இந்நிலைக்கு ஆளாக்கி விட்டது என செயலாளர் அறிவிக்கிறார்.

பம்பாய்

13-2-55 ஞாயிறு காலை 10 மணிக்கு தாராவி. கல்யாணிவாடி தோழர் டி. முருகேசன் இல்லத்தில் தாளமுத்து நடராசன் படிப்பகச் செயற்குழு கூட்டம் செயலாளர் தோழர் செண்பகபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

இடைக்கால எம்· கந்தையா நெல்லை திருமலை ஆகியோர்படிப்பக வளர்ச்சியை பற்றிப்பேசினர். பிறகு தோழர் கண்ணதாசன் தந்தையார் சாத்தப்பனர் அவர்களுடைய மறைவு குறித்து அனுதாபத்தை தெரிவித்து கொள்ளப்பட்டதுடன் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன·

*

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் லீக் பம்பாய் கிளையின் நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் 6-2-55 மாலை தாராவியில் நடைபெற்றது தாராவி தாலூகா காங்கிரஸ் குழுத் தலைவர் தோழர் எம். வி· துரைசாமி அவைத் தலைமை தாங்கி அதிகப்படியான அங்கத்தினர்களை சேர்க்க வேண்டியவழித்துறைகளை குறித்து விளக்கினர்.

பின்னர் ஏ· கே; ஐ· டேவிட் பிள்ளை, வி[illegible]ராஜு, ந. ஐ· சுப்பையா· மு, ரா[illegible] ஆறுமுகம்; நா. பெ. மாடசாமி, ஓ. கு. அய்யாசாமி, ந. சிவபாண்டியன் நா. ச. சுடலைமுத்து முதலியவர்கள் லீக்கின் முன்புள்ள ஆக்கவேலைகள் குறித்து பேசினர்·

திண்டுக்கல்

30—1—55 காலை 11 மணிக்கு நகர தி. மு. கழக அலுவலகத்தில் பாண்டியனர் நாடக மன்ற உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பி. சமதர்மம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மன்றத்துக்கு செயலாளராக தோழர் ஏ.பகவத்சிங். துணைச் செயலாளராக கே· செயராம், பொருளாளராக கே, கந்தசாமி அவர்களையும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

கணியூர்

12—2—55-ம் தேதி கணியூர் அர்ச்சுனன் கலாமன்றத்தாரால் இரா. சு. தங்கப்பழம் தீட்டிய 'புரட்சிப் பெண்' நாடகம் தோழர் கே. ஏ· முருகேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் நாடகம் முடியும்வரை அமைதியாக இருந்து நாடகத்தை கண்டு களித்தனர். நடிகர்கள். ஒவ்வொருவரும் திறமையாக நடித்தார்கள். நடிகர்களுக்கு மலர் மாலைகளும் பரிசுகளும் ஏராளமாக வழங்கினர்கள். ஆர்மோனிய ஆசிரியர் எம். முத்துசாமி அவர்கள் தங்களால் இயன்றவரை நாடகத்தை நடத்திக் கொடுத்தார்கள். அவர்களுக்கு பி. குருசாமி அவர்கள் பாராட்டுரைவழங்கினர்·

தூந்துக்குடி

ஆர். வி. மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையின் நிர்வாகத் தேர்தல் 4—2—55-ம் நாள் பலத்த போட்டியுடன் நடைபெற்றது· மில் தொழிலாளர் சங்கம் 5 பேர்களை நிறுத்தியது. தொழிற் சங்கத்தை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது· கம்யூனிஸ்டுகள் சமாதானம்—சமாதானம் என்று பேசி தேர்தல் அன்று போட்டியிட்டு விட்டார்கள். தொழிலாளர்களை பிளவுபடுத்தி கட்சியை வளர்க்கும் கம்யூனிஸ்டுகளின் நயவஞ்சகத்தை கண்ட தொழிலாளர்கள் கொதிப்படைந்து கம்யூனிஸ்டுகளை படுதோல்வி அடையச் செய்தார்கள்· அதுமட்டுமல்ல தேர்தல் கூட்டத்தில் கம்யூனிஸ்டுகளை பேசவிடாது தொழிலாளர்கள் எதிர்த்தனர். மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு தோழர் கே. வி. கே. சாமி செயலாளராக தொழிற் சங்கத்தால் சிபாரிசு செய்து நியமிக்கப்பட்டார்·

காமயகவுண்டன்பட்டி

இந்நகர் தி. மு· கழகக் கிளையின் செயற்குழுவினர்—பொது உறுப்பினர்கள் அடங்கிய அவசரக் கூட்டம் வீ. தம்பித்துரை அவர்கள் தலைமையில் 23-1-55—ல் நடைபெற்றது. அவ்வயம் 24–10–54-வுடன் பழைய நிர்வாகிகளின் ஒருவருட பதவிக்காலம் முடிவடைந்து விட்டதால் புதிய ஆண்டிற்கான நிர்வாகிகள் தேர்தலை நடத்த கூட்டத் தலைவரைக் கூட்டம் கேட்டுக் கொண்டதிற்கிணங்க செயலாளராக வீ. தம்பித்துரை, துணைச் செயலாளராக வெ. வாகைமாறன், பெருளாளராக அ. சதாசிவம்· மாவட்டப் பிரதிநிதியாக கே. ஏ. கலையழகன். ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயற் குழுவிற்காக மேற்கொண்டு 8 நபர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். நாராயணத்தேவன்பட்டி தி. மு. க தோழர்களையும் இவ்வூர் கிளையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அபரஞ்சி—சீனுவாசன்

கடலூர் தி மு கழகச் செயலாளர் தோழர் மு சீனுவாசன் — தோழியர் அபரஞ்சி ஆகியோரின் திருமணம் 7—2—55 காலை தேவனம்பட்டணத்தல் சிறப்புற நடைபெற்றது · தோழர் எ. கோவிந்தசாமி எம் எல்: எ, தலைமை வகித்தார். தோழர்கள் சித்தார்த்தன், இரெ. இளம்வழுதி, என்· வி. நடராசன் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். ஏராளமான வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன

சரோஜா—முனிராசு

11—2—55 காலை, கிருஷ்ணகிரியில் திராவிடன் புக்ஸ்டால் உரிமையாளர் ஆர். வெங்கடராஜலுவின் சகோதரி ஆர் சரோஜாவுக்கும், கோவை பி. முனிராசு B. Com· அவர்களுக்கும் கிருஷ்ணகிரி பிரமுகர் கோதண்டராம் தலைமையில் திருமணம் இனிது நடைபெற்றது· மணமக்களைப் பாராட்டி தோழர்கள் காஞ்சி அமிழ்தனர் ஜகன்னதன், எம்· கண்ணப்பன் பேசினர் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் பரிசுகள் வழங்கப்பட்டன· வந்திருந்த அனைவருக்கும் விருந்தும் நடைபெற்றது

நெடுஞ்செழியன்—மூக்கம்மாள்

பண்ணைக்காடு பாண்டியனர் நினைவு மன்ற பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் துணைவியார் மூக்கம்மாள் அம்மையாருக்கு 7–2 55 காலை ஆண்மகவு பிறந்தது· தாயும் சேயும் நலம்· குழந்தைக்கு பன்னீர் செல்வம் என பெயரிடப்பட்டது,

மேற்கண்ட நிகழ்ச்சிகளின் நினைவாய் ஒவ்வொன்றுக்கும் திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப்பெற்றோம்—நன்றி—நிர்வாகி;

நாடு என்றல் என்ன—தொடர்ச்சி

வேண்டுமென்றே — தென்னிந்தியாவை மொட்டையடிக்க என்றே—ஏகஇந்தியா பேசுவோர் அரசியல் புரட்டில் இறங்கியிருக்கிறார்கள் என்பது தெளிவாகி வருகிறது.

இதுபற்றி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னல்—வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்தபோது கொண்டிருந்த சிறிதளவு சந்தேகங்கூட டில்லி ஏகாதிபத்தியப் போக்கால் நீங்கிவிட்டது.

கடந்த 8 ஆண்டு டில்லி ஆட்சியில் தென்னிந்தியாவிற்குச் செலவிட்ட பணத்தையும், வட இந்தியாவுக்குச் செலவிட்ட பணத்தையும், புள்ளி விவரப்படி ஆராய்ந்தால், வடக்கே இமயமலையைப் பார்த்துக் கொண்டே செலவு செய்து, தெற்கே இந்துமாக் கடல்போல விடப்பட்டிருப்பது தெளிவாகும்,

வடக்கு உயர்ந்து கொண்டே போகிறது. தெற்கு தாழ்ந்து கொண்டே வருகிறது. வடக்கே மலை! தெற்கே கடல்! வடக்கு ஆளப் பிறந்தது! தெற்குதாழப் பிறந்தது! இந்த எண்ணத்தில் தான் டில்லி ஆதிக்கம் இருக்கிறதென்று, கடந்த 8 ஆண்டு சரித்திர ஏடு கூறுகிறது.

—(தொடரும்)

புத்தகப் பூங்கா

அண்ணு

இலங்கையிலிருந்து வெளிவரும் தி· மு· கழக திங்களிதழ். இலங்கையிலும் அதன் சுற்றுப் பகுதியிலும் நமது கழகம் வளர்ந்து வரும் விவரத்தை எடுத்துக் காட்டும் ஏடு சிறந்த கட்டுரை, கவிதைகளும் இடம் பெற்று வெளிவந்துள்ளது. இலங்கை தி. மு. கழகத் தோழர்களான கலாநேசன், கதிரவன் ஆகியோர் இவ்விதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்·

முகவரி:— அண்ணு நிலையம், 22 டயஸ்பிளேஸ், கொழும்பு,

*

திராவிடன் குரல்

திராவிட கழகக் கொள்கையினை விளக்கும் திங்கள் இதழ். சிறந்த கட்டுரைகளுடனும் மற்ற அம்சங்களுடனும் புத்தக வடிவில் வெளி வந்துள்ளது. தோழர் எம். எஸ். மணி ஆசிரியராக யிருந்து இவ்விதழைச் சிறப்பித்து வருகிறார். கதை—கவிதைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. விலை 4 அணு.

முகவரி:— 4, தலையாரித் தெரு, மயிலை, சென்னை-4.

*

காணிக்கை

தோழர் ப· க· மன்னர் மன்னன் (ப. க. சக்ரவர்த்தி) தீட்டிய நாடகம் 30 காட்சிகளைக் கொண்டது. சீர்திருத்தத்திற்கு இணங்காத தந்தையை விட்டுப்பிரிந்த ஒருவனின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து தீட்டப்பட்டுள்ளது. விறுவிறுப்பான வசனங்கள் எளிய நடை, கருத்துக் கோர்வை ஆகியவைகள் அமையப் பெற்ற இக் காணிக்கையை அனைவரும் ஏற்று சுவைக்க வேண்டியது அவசியமாகும்.

கிடைக்குமிடம்: ட. மு. க. வெளியீடு காவேரிப்பட்டணம் (சேலம் மாவட்டம்) 82 பக்கங்கள் விலை ரூ. 1.

*

பஞ்ச பாவையர்

ஐந்து மொக்குகள் அவைகளைச் சுற்றி வட்டமிடுகிறது ஒரு வண்டு! எனினும் வண்டு ஐந்து மலர்களைச் சுற்றி வட்டமிட்டதே தவிர பாரதக் கதைக்கு இலக்காகவில்லை· இறுதியாக ஒன்றினைத் தேர்ந்தெடுத்து தமிழர் பண்பாட்டின்படி தேன் சுவைத்து காலம் கடத்துகிறது அந்த வண்டு! தோழர் பாசமணி தீட்டியுள்ள இந்நூலில் அந்த வட்டமிட்ட "வண்டின்" வரலாற்றினைக் காணலாம்· எளியநடை இனிய தமிழ். அழகிய முகப்பு· 152 பக்கங்கள். விலை ரூ. 1—8—0.

கிடைக்குமிடம்: பாபு பதிப்பகம், 25 வெங்கய்யர் தெரு, சென்னை-1.

போன மச்சான் திரும்பி வந்தான்..

தோழர்களே. தலைப்பைக் கண்டவுடனே—திரைப்பட விமர்சனம் என்ருே அல்லது யாரையேனும் நையாண்டி செய்வதாகவோ எண்ணிவிடாதீர்கள். இக்கட்டுரையின் தலைப்பு நம் நாட்டின் அரசியலின் சம்பவங்களை எடுத்துக் காட்டுவதேயன்றி வேறில்லை!

டெல்லி ஏகாதிபத்தியம், தென்னாட்டினரை எவ்வளவு மட்டந்தட்டி வருகிறதென்பதை திராவிட இயக்கத்தினர் சுட்டிக் காண்பிக்கும் போதெல்லாம் இவர்களுக்கு வேறு வேலை என்னயிருக்கிறது. கிடக்கிருர்கள் சிறுமதியாளர்கள்! என்று கேலி பேசவும் சீற்றங் கொள்ளவும் காங்கிரஸ் தோழர்களில் பலர் முனைகிருர்களேயன்றி தி. மு. கழகத்தினரின் கொள்கையினைச் சற்று நிதானத்தன்மையுடன் சிந்திக்கும் மனவளம்பெற முயற்சிப்பதில்லை. அதுமட்டுமல்ல இந்திய சர்க்காரில் தென்னாட்டவர்கள் அமைச்சர்களாக இடம் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டி, நேருஜி சர்க்கார் தென்னாட்டினரை எந்த அளவுக்கு உயர்த்துகிருர்கள் பார்த்தீர்களா நேருஜிக்கு தென்னாட்டவரிடம் உள்ள மதிப்பே அலாதிதான் என்று பெருமையும் பேசுகின்றனர் தேசியத் தோழர்கள்!

அத்தோழர்களை, 1947-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை நேரு சர்க்காரின் மந்திரி அவையில் நடைபெற்றுவரும் முக்கிய சம்பவங்களை நடு நிலையிலிருந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிருேம்!

● 1947-ம்ஆண்டு ஆகஸ்டில் நிறுவப்பட்ட சுதந்திர சர்க்காரின் நிதி அமைச்சராக சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் நியமிக்கப்பட்டார்! ஆனுல் அவர் தமது பதவியிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது நேரு சர்க்கார்!

● அடுத்து, டாக்டர் ஜான் மத்தாய் நிதி அமைச்சராக இடம் பெற்ருர்! எனினும் "விட்டதடி உன் ஆசை விளாம்பழத்து ஓட்டோடே" என்ற பழமொழிக் கேற்ப பதவியை வீசி யெறிந்துவிட்டு அவரும் வெளியேறினுர்!!

● ஆச்சாரியார் அவர்கள் இலாக்கா பற்று அற்ற அமைச்சராக டெல்லி ஆட்சி பீடத்தை அலங்கரித்து வந்தார்! இவருக்கும் பதவிமீது வெறுப்புதட்டி அதைவிட்டு ஓடோடியும் சென்னை வந்து சேர்ந்தார்!

● தோழர். வி. வி. கிரி, தொழிலாளர் இலாக்கா அமைச்சராக டெல்லி ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்து, அண்மையில் நேரு சர்க்காரின் போக்கு பிடிக்காமல் வெளியேறிய விவரமும் பொது மக்கள் அறிந்ததேயாகும்.

● தற்போது, இந்திய சர்க்காரின் வியாபார அமைச்சராக யிருந்து பணியாற்றிய தோழர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது பதவியிலிருந்து வெளியேறி சென்னை திரும்பிவிட்டார்! இவர் அமைச்சர் பதவியை மட்டுமல்லாது. பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் விலகப் போவதாகக் கூறியிருக்கிருர்!

தென்னாட்டைச் சார்ந்த இவர்களின் ராஜினாமாக்கள் ஒவ்வொன்றின் தனித்தன்மையை ஆராயப்புகின் ஒன்றுக் கொன்று சில வேறு பாடுகளிருப்பினும், அடிப்படையை நோக்கும் போது நேரு சர்க்காரின் ஆதிக்கம், தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின்—காங்கிரசுக்கு ஆதரவு தரும் தனிப்பட்ட அறிஞர்களின் தன்மானத்தை சீரழியச் செய்து வருகிறது என்பதை எவரும் எளிதில் உணரலாம்.

டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் ராஜினாமா செய்துவிட்டபின், அப்பதவி வகிக்கவும். பிறகு ஒரு மாநிலத்தின் கவர்னர் பதவிக்கும் சர். ஆற்காடு ராமசாமி அவர்களை நேரு சர்க்கார் அழைத்தபோது, அவர் அதனை ஏற்க மறுத்து விட்டதாகவும் "நேரு சர்க்காருக்கு ஊதியம் இன்றி என்னுலியன்ற அளவு உதவி அளிக்கும் வகையில் தொண்டு புரிய சித்தமாயுள்ளேன். ஆனுல் அவர்களின் பிடிப்பிலே நான் ஓர் அங்கமாக யிருந்து பிறகு கருத்து வேறுபாடு கொண்டு மனத்தாங்கலடைய நான் தயாராயில்லை" என்று சர். ஏ. ராமசாமி அவர்கள். முன்னமேயே தெரிவித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. டெல்லி தர்பார் தென்னாட்டவர்களை எவ்வாறு மதித்து நடத்துகின்றனர் என்பதும், அவர்களின் போக்கு எத்தகையது என்பதும்இதிலிருந்து விளங்குகிறதல்லவா?

எனினும் தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள், இவ்விவரம் அறிந்தோ அறியாமலோ—டெல்லி ஆட்சிபீடத்துடன் மோதி மூக்குடைபட்டபின், போன மச்சான் திரும்பி வந்தான்......! என்ற கதையைப் போல தாயகம் திரும்புகின்றனர்! அவர்களில் ஒருவர்தான் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்! பரிதாபம்! பரிதாபம்!!

—நக்கீரன்

தமிழை வாழ வைக்கிருர்களாம்!

●

சென்னையில், மூன்ருவது தமிழ் எழுத்தாளர் மாநாடு என்ற பெயரால் இத்திங்கள் 12—13-ம் நாட்களில் விழா ஒன்று நடைபெற்றிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று அரசியலாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாக முடிவும் செய்யப்பட்டதுடன், தமிழை வாழவைக்க வேண்டிய வழிவகைகளையும் அரசியலாருக்குத் தெரிவித்தார்களாம் அத்தமிழ் எழுத்தாளர்கள்!

சென்னை மாநில ஆட்சியாளர் தமிழை வாழ வைப்பரோ யில்லையோ அதைக் குறித்து நமக்கு ஐயப்பாடு இருக்கத்தான் செய்கிறது.

ஆனுல் இத்தமிழ் எழுத்தாளர் மாநாட்டினை நடத்திய நல்லவர்கள் எந்த அளவுக்கு தமிழைவாழவைத்திருக்கிருர்கள்என்பதைக் காணும் போதுதான் நமக்குச் சிரிப்பாய் வருகிறது!

அம்மாநாட்டின் அச்சிட்ட அழைப்பிதழில் காணப்படுவதை அன்பர்களுக்கு அர்ப்பணிக்க விரும்புகிருேம்.

தமிழ் எழுத்தாளர் **மகாநாடு**—ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா—**ஸ்ரீமான்கள்** வையாபுரிப்பிள்ளை, மு. ராகவய்யங்கார், ம. பொ. சிவஞானம்—**ஸ்ரீமான்கள்** தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர், ஸி. ஆர். சீனிவாசன்-(விருந்து **சங்க அங்கத்தினர்களுக்கு**)........

தோழர்களே—தமிழை எப்படி வாழ வைக்கிருர்கள் பார்த்திர்களா, தமிழ் எழுத்தாளர் மாநாட்டினர்! திருவாளர்கள் வையாபுரிப்பிள்ளை. மு. ராகவய்யங்கார். மீனுட்சி சுந்தரனுர் என்றும், அங்கத்தினர்களுக்கு என்பதற்கு பதிலாக உறுப்பினர்களுக்கு என்றும், மகாநாடு—என்பதற்கு மாநாடு என்றும் அழைப்பிதழில்குறிப்பிடலாகாதா?

இவ்வாறு நாம் கேட்பதைக்கூட குறுகிய மனப்பான்மை அல்லது நாத்திகர்களின் கூப்பாடு என "தமிழ் எழுத்தாளர் பாணி" யில் தூற்றப்படுமோ—அறியோம்!

தமிழைக் காக்க வந்த "ஸ்ரீமான்களே" நீவிர் வாழ்க. ஆனுல் தமிழையும் தமிழ் எழுத்தாளர் உலகையும் திருத்த முற்பட்ட நுமது போக்கு திருந்துக!

—என்வியென்

அண்ணு சொற்பொழிவு தொடர்ச்சி

வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நன்ருகப் புரிந்து கொள்ள **வேண்டும்**. நாம் என்ன சொல்கிருேம் என்பதை கேட்காமலேயே கோபப் படுவார்களின் ஆத்திரம் கண்டு கழகத் தோழர்கள் ஆயாசப்படவோ ஆர்ப்பாட்டம் செய்யவோ வேண்டாம்; ஆத்திரப்படுகிற அந்த நல்லவர்களுக்கு விஷயங்களை விளக்கமாகச் சொல்லுங்கள்; அவர்கள் கோபம் தணிந்த பின் நம்மீது அவர்களுக்குச் சிறிது சந்தேகம் பிறக்கலாம்: அந்தச் சந்தேகங்களையும் துடையுங்கள்: பின்பு அவர்கள் நாம் கூறுகிற உண்மைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டால், நிச்சயமாக நம்மை ஆதரிப்பார்கள்.

ஆந்திரர், கேரளர், கன்னடியர் என்ற இதர திராவிட இன மக்களில் கன்னடியர்தான் திராவிட நாடு கோரிக்கைக்கு சீக்கிரம் ஆதரவு தர முற்படுவார்கள் என்று நான் நம்புகிறேன். கர்னுடக மக்கள் என்று நான் குறிப்பாகக் கூறுவதற்குக் காரணம் 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்று கூறும் பெரியார் இராமசாமி ஒரு கன்னடியர். கன்னடத்தைச் சேர்ந்த பெரியார் இராமசாமி அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு நாங்கள் எல்லாம் இப்படி பணியாற்றும்போது நீங்கள் ஏன் இங்கு தி. மு. கழக இலட்சியத்தை ஏற்றுக் கொள்வதில் அதிக அக்கரையாய் இருக்கக் கூடாது?

தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆகியோரிடையே கூட்டுறவு ஏற்பட வேண்டுமென்பது புதியதாகக் கோரப்படுகிற ஒன்றல்ல.

திராவிடர் இயக்கத்தின் தோற்றுவாயாயிருந்த நீதிக்கட்சியில் இருந்த பெருந் தலைவர்கள் எல்லாம், திராவிடத்தின் எல்லா பகுதிகளிலுமிருந்து வந்தவர்கள் தான்; சர். பி. தியாகராயர், முனுசாமி நாயுடு போன்றவர்கள் ஆந்திரத்தையும், பெரியார் அவர்கள் கன்னடத்தையும், டாக்டர் நாயர் கேரளத்தையும், பி. டி. இராசன் போன்ருேர் தமிழகத்தையும் சேர்ந்தவர்கள். இவர்களைப் போன்றவர்கள்தான் நீதிக்கட்சியின் பெருந் தலைவர்களா யிருந்தனர்.

அந்தக் கட்சியிலிருந்து புடம் போட்டு எடுக்கப்பட்டவர்கள்தான் திராவிடர் இயக்கத்தவர்கள்.

நீதிக் கட்சியை ஏழையின் கட்சியாக ஆக்கி யிருக்கிருேம்—அவ்வளவுதான். பின்பு திராவிடர் கழகத்திலிருந்தும் நாங்கள் பிரிந்தவர்கள். புடம்போட்டு எடுக்கப்பட்டவர்கள்.

திராவிடர் கழகத்தைவிட்டு தோளில் இருந்த துண்டுடன் வெளிவந்த நாங்கள் இன்று கழகத்துக்கென சொந்தத் திலே கட்டடமும், பத்திரிகைகள்கொண்டவர்களாகவும் பிச்சைக்காரர்களாகிய நாங்கள் தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்கு ரூ 25000 தந்தவர்களாகவும் இருக்கிருேம். இப்படி இவ்வளவு குறுகிய காலத்தில் தி. மு கழகம் தமிழ் நாட்டில் வளர்ந்திருப்பதற்குக் காரணம் நாட்டின் பல்வேறு பிரச்னைகளுக்கு நாங்கள் காட்டும் காரணங்கள்தான் சரியானவை என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிரு [illegible]

அதைப்போலவே கன்னட மக்களும் இந்த இரண்டு நாள் மாநாட்டிலும் நாங்கள் பேசினவற்றைக் கேட்டு ஓரளவு நம்மை புரிந்து கொண்டிருப்பார்கள் என்றும் ஆதரவு தருவார்கள் என்றும் நம்புகிறேன்.

என்று பொதுச் செயலாளர் அண்ணு தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதோடு, ஒரே கடவுள் தன்மையைப் பற்றியும் விளக்கினுர்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம் 16, [illegible] தெரு, சென்னை